விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 25 புதன்கிழமை (09.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 080

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கையில் மோசமாகும் மனித உரிமை மீறல்கள்!

## ஐ.நாவுக்கு அறிக்கை அனுப்பிவைப்பு

(ஜெனிவா)

இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் மோசமடைந்துள்ளதாக மனித உரிமை அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் அவைக்கு முறையிட்டுள்ளன. இது தொடர்பாக பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு எழுத்து மூல அறிக்கைகளைக் கையளித்துள்ளன. (20ஆம் பக்கம் பார்க்க)

## பாரிஸில் மோதல் தமிழ் இளைஞன் பலி

(கொழும்பு)

பிரான்ஸ் நாட்டில் இலங்கை தமிழர்கள் அதிகம் வாழும் பாரிஸ் புறநகர்ப் பகுதியான லாசுவர் நோவ் பகுதியில் திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இரு தமிழ் குழுக்களுக்கிடையில் நடந்த சண்டையில் 26 வயது நிரம்பிய இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரின் கைகள் இரண்டும் துண்டாடப்பட்டு நிலத்தில் போடப்பட்டிருந்ததாக பாரிஸ் நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர். மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் கடை ஒன்றிற்கு முன்னால் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மதுபான கடைக்கு ஒருவர் சென்றபோது இரு கார்களில் கத்திகள் வாள்களுடன் முகத்தை கறுப்பு துணியால் கட்டியவாறு வந்த 6 பேர் அந்த இளைஞரை வாள்களால் வெட்டியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் பொலிஸாருக்கு சாட்சியமளித்துள்ளார். தான் தொலைக் (02ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்தகட்ட பேச்சுக்கான உபகுழுவை கூட்டுவதில் அரசாங்கம் இழுத்தடிப்பு

### சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான அரசு-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உயர் குழுவை கூட்டுமாறு கூட்டமைப்பு விடுத்த கோரிக்கைக்கு அரசிடம் இருந்து எந்தவித பதிலும் கிடைக்கவில்லை எனவும் அரசு பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி நடைபெறவிருந்த உபகுழுவின் கூட்டத்தை உள்ளூராட்சி தேர்தலில் அமைச்சர்கள் பங்குபற்றுவதன் காரணமாக பிற்போடுவதாக அரசு அறிவித்திருந்தது.

இந்தக் கூட்டத்தை நாடாளுமன்ற அமர்வு நடைபெறும் நேற்று அல்லது இன்று ஏற்பாடு செய்யுமாறு கூட்டமைப்பு அரசிடம் கோரிக்கை விட்டிருந்தபோதும், இதற்கு அரசிடம் இருந்து எந்தவித பதிலும் கிடைக்கவில்லை என சுரேஷ் பிரேமச் (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தின் பின்னான நிலை குறித்து அமெரிக்காவுடன் ஜனாதிபதி பேச்சு

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் மற்றும் யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து அமெரிக்காவும் இலங்கை அரசாங்கமும் நேற்று கலந்துரையாடியதாக ஜனாதிபதியின் செயலகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்னீஸுக்கும் இடையிலான சந்திப்பின் போது இது குறித்து கலந்துரையாடப்பட்டது.

யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளுக்கு அமெரிக்காவின் ஆதரவு இருப்பதாக தெரிவித்த அமெரிக்கத் தூதுவர் புட்னீஸ் வர்த்தகம் மற்றும் விமானப் போக்குவரத்து துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் வட பகுதியில் இந்திய மீனவர்கள் ஊடுருவது குறித்து இங்கு கலந்துரையாடப் (02ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் நடத்தியோரை கைது செய்ய விசேட குழு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் மீது தாக்குதல் மேற்கொண்ட நபர்களை கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஜயந்த கமகே தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம், நொச்சியாகம பகுதியில் நேற்று முன்தினம் மாலை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மீது மோட்டார் சைக்கிளில் (20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழு சிபார்சை அரசாங்கம் விரைவில் அமுல்படுத்தும்



### அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அரசாங்கம் அமுல்படுத்தும் என பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கைக் கிணங்கவே சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தலைமையிலான முகவரகங்களுக்கிடையிலான ஆலோசனை குழுவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளை அமுல்படுத்தும் நடவடிக்கையில் இக்குழு ஈடுபட்டுள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

## 63 தொகுதிகள் விட்டுக்கொடுத்து திமுக-காங்கிரஸ் உடன்பாடு

(சென்னை)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், திமுக-காங்கிரஸ் கட்சிகளுக்கிடையில் நீடித்து வந்த தொகுதிப் பங்கீட்டு சிக்கலுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அதன்படி, காங்கிரஸ் கட்சி 63 தொகுதிகளில் போட்டியிட உள்ளது.

தமிழக காங்கிரஸ் கட்சியின் மேலிடப் பொறுப்பாளரும் மத்திய அமைச்சருமான குலாம் நபி ஆசாத், இதை நேற்று மாலை செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

இதற்கிடையே அண்ணா அறிவாலயத்தில் நடந்த ஒரு வைபவத்தில் உரையாற்றிய திமுக தலைவர் முதல்வர் கருணாநிதி இந்தக் கூட்டணி உடன்பாடு குறித்த செய்தியை உறுதிப்படுத்தியுள்ளார்.

திமுக, காங்கிரஸுக்கு 61 தொகுதிகளை தரும் என்றும் பாமக ஒரு தொகுதியையும் முஸ்லிம் லீக் ஒரு தொகுதியையும் காங்கிரஸுக்கு விட்டுத்தருவார்கள் என்றும் கருணாநிதி கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சி 60 தொகுதிகளுக்கு ஒப்புக்கொண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டை விட்டு வெளியேறுகிறார் கடாபி!

### லிபியாவில் பரபரப்பு

தானும் தன் குடும்பத்தினரும் சொத்துக்களுடன் எவ்வித ஆபத்துமில்லாமல் லிபியாவை விட்டு வெளியேறுவதற்கு வாய்ப்பளிக்கும்படி எதிர்த்தரப்பிடம் கடாபி கோரிக்கை விடுத்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் தனது தரப்பில் ஓர் பிரதிநிதியை பொங்காஷியில் இயங்கிவரும் இடைக்கால தேசிய கவுன்சில் அரசிடம் அனுப்பி வைத்தார்.



தானும் தன் குடும்பத்தாரும் சொத்துகளுடன் லிபியாவில் இருந்து பத்திரமாக வெளியேற அனுமதியளிக்கவேண்டும். எதிர்காலத்தில் தன்மீது எவ்வித வழக்கும் போடக்கூடாது. இடைக்கால அரசை அங்கீகரிக்கும் விதமாக நாடாளுமன்றில் (20ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிஸில் மோதல்...

காட்சி பார்த்துக்கொண்டிருந்த போது ஒருவர் தன்னைக் காப்பாற்றுமாறு அவலக்குரல் எழுப்பியதை கேட்டதாகவும் உடனடியாக யன்னல் வழியாக எட்டிப்பார்த்த போது வாள்கள் கத்திகளுடன் காணப்பட்ட சிலர் ஒருவரை வெட்டிக்கொண்டிருந்தனர் என சம்பவத்தை நேரில் பார்த்த மிசேல் என்பவர் தெரிவித்தார். இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் சம்பவம் இடபெற்ற இடத்திலிருந்து யப்பானில் தயாரிக்கப்பட்ட சுவரியவாள் ஒன்றை கண்டெடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-5)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு
20.07.1913

இறப்பு
07.02.2011

அமரர் கணபதிப்பிள்ளை செல்லம்மா

ஆண்டு விகிர்தி தைத்திங்கள் ஏழாம் நாள்
பூண்ட வளர் சதுர்த்தி பொன்னாளில் -பார்புகழும்
ஏராளன் கணபதிப்பிள்ளை நன்மனையாள் செல்லம்மா
பார்விட்டு பரமபதம் அடைந்தநாள்

07.02.2011 அன்று இறைபதம் அடைந்த அமரர் செல்லம்மா கணபதிப்பிள்ளை அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இரங்கல் செய்திகள், மலர் வளையங்கள் அனுப்பி வைத்தோருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இன்று (09.03.2011) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"பிருந்தாவனம்"
28/36, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மகள், மகன்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப் பிள்ளைகள்,
கொள்ளுப்பேரன்.

(8-2661)

# அரசு உறுதியளித்த விபரங்கள் இன்னும் அமுல்படுத்தப்படவில்லை

## மாவை எம்.பி. விளக்கம்

(கொழும்பு)

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்ற கருத்தையே நாங்களும் கொண்டிருக்கிறோம். இது ஒருபோதும் ஓர் அரசியல் தீர்வுக்கான அடிப்படையாக இருந்ததாக நான் நினைக்கவில்லை. நாங்கள் அதனைப் பகிரங்கமாகவே சொல்லியிருக்கிறோம்.

இதனடிப்படையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகளுடனும் பேசுவதற்கு நம் தயாராகவே இருக்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மார்ச் முதலாம் திகதி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர்களுடன் சந்திப்பு ஒன்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்தச் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. காலவரையறையின்றியோ அன்றி பூரணமாகவோ ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என நான் கருதவில்லை. எதிர்வரும் 8,9ஆம் திகதிகளில் சந்திக்க முடியுமா எனக் கேட்டிருக்கிறோம்.

இது நாடாளுமன்றக் காலம். தவிர நாங்களும்தேர்தல்காரணமாக அம்பாறை மாவட்டத்தில் நிற்கிறோம். அவர்களும் தேர்தல் விடயங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். 8,9ஆம் திகதிகளில் இந்தச் சந்திப்பு ஏற்படலாம் என நம்புகிறோம்.

ஏற்கெனவே இரு கட்டங்களில் பேசிய விடயங்களின் தொடர்ச்சியாகவே நாம் பேசுவோம். ஒன்று இந்த உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட வேண்டும் என்ற விடயம். அந்த இடங்களில் எங்கள் மக்கள் மீளக் குடியமர்வதற்கு இடமளிக்க வேண்டும் என்ற விடயம். இரண்டாவது- போர்க்காலத்திலும் அதற்குப் பின்னரும் சரணடைந்த இளைஞர்களின் விடுதலை அவர்கள் பற்றிய விபரங்களை பெற்றோர்களுக்கோ அன்றி உறவினர்களுக்கோ பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்ற விடயம். அடுத்ததாக மக்களுடைய மீள்குடியேற்றம் அவர்களுடைய வாழ்வாதாரங்களை கட்டியெழுப்ப வேண்டிய விடயங்கள் குறித்து நாம் பேசியிருந் தோம்.

அதற்கு எழுத்து மூலமாக சில பதில்கள் தரப்பட்டு இன்னும் நடைமுறைக்கு வராமல் இருக்கின்றன. அவர்களுடைய பதில்களில் சில சாதகமான விடயங்களும் இருந்தன. உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்குவது பற்றியும் இராணுவ முகாம்கள் அமைந்த இடங்களில் மக்கள் குடியேறுவதற்குத் தடையில்லை என்ற விடயங்களும் எங்களுக்குத் தரப்பட்டுள்ளன. அதனைவிட சரணடைந்த இளைஞர்கள் பற்றிய விபரங்களையும் வவுனியாவில் பார்க்கலாம் என்ற விபரங்களும் எங்களுக்குத் தரப்பட்டது. இப்படியான விடயங்கள் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

தவிர அரசியல் தீர்வு தொடர்பான விடயங்கள் இன்னும் முக்கியமான கட்டத்தை அடையவில்லை. வரும் காலத்தில் இவ்விடயத்தில் நாங்கள் முனைப்புக் காட்டுவோம் என மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (ச-5)


### வீடு விற்பனைக்கு

மானிப்பாய் இணுவில் வீதி கராஜ் ஒழுங்கையில் (சாத்தாவத்தை கோவிலுக்கருகில்) 3 பரப்பு காணியில் 3 அறை கொண்ட நல்லநிலையிலுள்ள அழகான வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
0772565676, 0773544915

(3949)

### உழவு இயந்திரம் விற்பனைக்கு

ஒறிஜினல் பதிவும் குறைந்த பாவனையுமுடைய சிறந்த நிலையிலுள்ள மசிபேர்க் குஷன் 24037ஶ்ரீ XXXX உழவு இயந்திரம் சாவகச்சேரியில் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0774540604

(3987)


## யுத்தத்தின்...

பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க ஆகியோரும் இச்சந்திப்பில் பங்கு பற்றினர். (ச-5)

# நன்றியுடன் கூடிய அறிவித்தல்

நல்லூர் செட்டித்தெருவில் மூன்று நட்சத்திர விடுதி கட்டுவதற்கு உல்லாச விடுதித் திணைக்களத்தினால் அனுமதி கிடைத்திருந்த போதிலும் காரணமின்றியும் ஆதாரமின்றியும் குறிப்பிட்ட ஒரு நாளிதழில் நல்லூர் மக்கள் மூன்று நட்சத்திர விடுதி அமைவதை விரும்பவில்லையென்றும், ஆட்சேபனை தெரிவிக்கின்றனர் என்றும் பிரசுரித்திருந்தது. அதையடுத்து யாழ்.மாநகரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன எனக்கு வழங்கவேண்டிய அனுமதியை தற்காலிக நிலுவையில் வைத்துவிட்டு ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற அரசாங்கத்தின் சட்டத்தின் கீழ் மக்களை நடாத்தி வரும் யாழ்.மாநகரமுதல்வர், ஆணையாளர், பாதுகாப்பமைச்சின் கீழ் இயங்கும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமையாளர் ஆகியோர் இம் மூன்று நட்சத்திர விடுதி அமைப்பது பற்றி அவர்களின் மேலிட உத்தரவுகளுக்கமைய சட்டபூர்வமாக மக்களிடம் மனுக்கேட்டு வலம்புரி, உதயன், தினக்குரல், தினமுரசு ஆகிய பத்திரிகைகளில் பிரசுரித்து ஆட்சேபனையிருப்பின் இருவார காலப்பகுதிக்குள் தங்களுக்கு மனு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டது எல்லோரும் அறிந்ததே.

இதனைத் தொடர்ந்து எவருமே எவ்வித்திலும் யாழ்.மாநகர சபைக்கோ, பாதுகாப்பமைச்சின் கீழ் இயங்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கோ எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காத பட்சத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபை கடந்த 25/02/2011ஆம் திகதியன்று அவர்களின் மேலதிகாரிகளின் உத்தரவுடன் மூன்று நட்சத்திர விடுதியமைக்க உத்தரவு வழங்கியது.

பாரபட்சமின்றி சட்டத்தைப் பொதுவாக எண்ணி மக்களுக்கு சேவையாற்றிவரும் நமது அமைச்சருக்கும், யாழ்.மாநகர முதல்வர், ஆணையாளர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் சில அரச அங்கீகாரமற்ற நிறுவனங்கள் நேர்மையான ஆட்சி நடத்தும் மாநகர சபைக்கு உத்தரவிடுவது போல் மனு அனுப்புவதையும் விடுதிகளுக்கு நட்சத்திரம் வழங்குவது எந்தக் கட்டுக்கோப்பின் கீழ் என்று அறியாமல் கையில் கிடைக்கும் பேனாவை வைத்து தங்கள் பொறாமையின் பசியைப் புசிப்பதற்கு மனு அனுப்புவதையும் நினைத்து மிகவும் வருத்தமடைகின்றேன்.

இப்படிக்கு

திரு.வெற்றிவேலு-யஜெந்திரன்

(3988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்தியா – நெதர்லாந்து டில்லியில் இன்று சந்திப்பு

(டில்லி)

உலகக்கிண்ணகிரிக்கெட் தொடரில் டில்லியில் நடைபெறும் 25 ஆவது லீக் போட்டியில் இந்திய நெதர்லாந்து அணிகள் சந்திக்கின்றன.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பத்தாவது உலகக் கிண்ணத் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் டில்லி பெரோஷா கொட்லா மைதானத்தில் இன்று நடைபெறும் 25 ஆவது லீக் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த இந்திய நெதர்லாந்து அணிகள் மோதுகின்றன.



இதில் இந்திய அணி மோதிய 3 ஆட்டத்தில் 2 இல் வெற்றிபெற்றது. ஒரு ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இன்றைய் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றால் காலிறுதி வாய்ப்பு உறுதியாகிவிடும்.

இந்திய அணி துடுப்பாட்டத்தில் வலுவாகவுள்ளது. டெண்டுல்கர், யுவராஜ்சிங், ஹோலி, காம்பீர் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். சேவாக் கடந்த இரு ஆட்டங்களில் பிரகாசிக்கவில்லை. இன்றைய ஆட்டத்தில் அதிரடி காட்டலாம். யூசுப்பதான் அதிரடிக்குத் திரும்பியது அணியை வலுப்படுத்தியுள்ளது.

இந்திய அணியின் பந்துவீச்சு இன்னும் முழுப்பலம் பெறவில்லை. பகுதிநேர பந்துவீச்சாளரான யுவராஜ்சிங் ஜொலிக்கும் நிலையில் முன்னணி சுழல்பந்து வீச்சாளரான ஹர்பஜன்சிங் தொடர்ந்து படுமோசமாக பந்துவீசி வருகிறார்.

சகீர்கான் மட்டுமே சற்று மிரட்டுகிறார். முனாப் பட்டேல் விக்கெட் வீழ்த்துவதை விட ஓட்டங்களை விடக்கூடாது என்பதை மையமாகக் கொண்டே செயற்படுகிறார்.

நெதர்லாந்து அணி முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து அணிக்கு சற்று தண்ணி காட்டிப் பார்த்தது. இதில் நெதர்லாந்து 298 ஓட்டங்களைக் குவித்த போதும் தோல்வியடைந்தது.

நெதர்லாந்து மூன்று போட்டிகளில் விளையாடி ஒரு வெற்றியைக் கூடப் பெறவில்லை.

டோஸ் சட் மட்டுமே துடுப்பாட்டத்தில் நம்பிக்கையளிக்கிறார்.

பார்சி,போரன், டாம் கூப்பர், ஹீடிரன்ட் ஆகியோர் கைகொடுத்தால் துடுப்பாட்டத்தில் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையை எட்டலாம்.

இப் போட்டியில் தோல்வியடைந்தால் நெதர்லாந்து அணி காலிறுதி வாய்ப்பை இழக்கலாம்.

உலகக்கிண்ண அரங்கில் இந்திய - நெதர்லாந்து அணிகள் இரண்டாவது முறை சந்திக்கின்றன. 2003 ஆம் ஆண்டு போட்டியில் இந்திய அணி 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருந்தது.

# ரசிகர்கள் மீது மீண்டும் தடியடி



நாக்பூரில் கிரிக்கெட் ரிக்கெற்றை வாங்க காத்திருந்த ரசிகர்கள் மீது பொலிசார் தடியடி நடத்தினர். உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியா – தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான லீக் போட்டி எதிர் வரும் 15 ஆம் திகதி நாக்பூரில் நடக்கிறது. இதற்கான ரிக்கெட் விற்பனை நேற்று விதர்பா கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடந்தது. குறைந்த அளவிலான ரிக் கெட்டுக்களே விற்கப்படுவதால் இதைப்பெற நேற்று முன்தினம் மாலையில் இருந்தே ரசிகர்கள் வரிசையில் காத்திருந்தனர்.

நேற்று விற்பனை ஆரம்பமானதும் அங்கு வைக்கப்பட்டிருந்த தடுப்புக்களை தாண்டி ரசிகர்கள் செல்ல முயன்றனர். இதையடுத்து அங்கு பாதுகாப்புக்கு இருந்த பொலிஸார் தலையிட்டு ரசிகர்கள் மீது தடியடி நடத்தி கூட்டத்தை ஒழுங்கு படுத்தினர்.

இது குறித்து ராம்தீக்சித் என்பவர் கூறுகையில்,

நேற்று முன்தினம் இரவில் இருந்தே ரிக்கெற்றை வாங்கிவிட வேண்டும் என்ற வேகத்துடன் கிராமத்தில் இருந்து நிறையப் பேர் வந்து காத்திருந்தனர். ரிக்கெற் கவுண்டரை திறந்ததும் ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டு செல்ல முயற்சித்தனர்.

இதனால் பொலிஸார் தடியடி நடத்தி கலைத்தனர். எனக்கு ரிக்கெற் கிடைக்காததால் போட்டியை ரிவியில் காண்பேன் என்றார்.

ஏற்கெனவே பெங்களூரில் ரசிகர்கள் மீது தடியடி நடத்தி 10 நாட்கள் கூட ஆகாத நிலையில் மீண்டும் நாக்பூரில் இதேபோன்று சம்பவம் நடந்துள்ளது.

# அணிக்கு ஆதரவு வேண்டும்


பங்களாதேஷ் அணி தொடர்ந்து தோல்வியடைந்து வருவதால் ரசிகர்கள் கோபம் அடைந்து வீரர்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றார்கள்.

இது குறித்து முன்னணி துடுப்பாட்ட வீரர் தமீம் இக்பால் கூறும் போது, பங்களாதேஷ் கிரிக்கெட் ரசிகர்கள் எந்தவிதமான மோசமான செயல்களையும் செய்யக் கூடாது. கிரிக்கெட்டில் வெற்றி தோல்வி சகஜம். எப்படி இருந்தாலும் அணிக்கு ஆதரவாக இருக்கவேண்டும் என்றார்.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!
MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்
தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்
கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்
1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணிவிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

காலிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள் ?
Cricket
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 10.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.
1. ..........
2. ..........
3. ..........
4. ..........
5. ..........
6. ..........
7. ..........
8. ..........
பெயர்: ..........
முகவரி: ..........
..........
தொ.பே: ..........
தே.அ.அ.இல: ..........
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490

இன்றைய கேள்வி ?
உலகக்கிண்ண வரலாற்றில் ஒரு போட்டியில் 5 விக்கெட்டுக்களை கைப்பற்றியும் 50 ஓட்டங்கள் அடித்த வீரர் யார்?
..........
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 11.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.
பெயர்:- ..........
முகவரி:- ..........
..........
தொ.பே:- ..........
தே.அ.அ.இல:- ..........
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.



உலகக்கிண்ண கிரிக்கெட்-2011
சம்பியனாகும் நாடு?..........
தொடர் நாயகன் விருது யாருக்கு?..........
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.
பெயர்..........
முகவரி..........
தொலைபேசி..........
தே.அ.அ.இல..........
'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
இன்னும் பல பரிசுகள்
Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.
ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com
SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592
PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
306, Kasthuriyar Road, Jaffna
T.P. 021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பு முகாமிலுள்ள மகனை மீட்டு தருவதாகக் கூறி 40 ஆயிரம் ரூபாய் மோசடி

## சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது

(மிருசுவில்)

**தடுப்பு முகாமிலுள்ள மகனை மீட்டுத் தருவதாகக் கூறி தாயொருவரிடமிருந்து 40 ஆயிரம் ரூபாய் பணத்தை மோசடி செய்த சம்பவமொன்று கடந்த வெள்ளிக்கிழமை மிருசுவில் வைத்தியசாலைக்கு முன்பாக இடம் பெற்றுள்ளது.**

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

தடுப்பு முகாமிலுள்ள மகனை மீட்டுத் தருவதாகத் தாயார் ஒருவரிடம் கூறிய நபரொருவர் அதற்கு 40 ஆயிரம் ரூபாய் பணம் தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்கிய தாயார் தனது ஊரான பளையிலிருந்து பணத்துடன் குறித்த நபரின் ஊரான மிருசுவிலுக்கு வந்தவேளை பணத்தைத் தருமாறு அவர் கேட்டுள்ளார். எனினும் அதற்கிணங்காத தாயார் மகனை மீட்டுத் தரும் போதே பணத்தைத் தருவதாகக் கூறியுள்ளார்.

இதனையடுத்து சூழ்ச்சி செய்த அந்நபர் தாயாரிடமிருந்த பணத்தை வேறொரு நபர் மூலமாக வழியில் வைத்து அபகரித்துள்ளார். இதேவேளை இச்சம்பவத்துடன் தொடர்புடைய இருவரும் உறவினர் எனக் குறிப்பிடப் படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக கொடிகாமப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததையடுத்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஶ்ரீ-3-85)

# கலை இலக்கியப் பணிக்கான உயர்விருது இம்முறை திருமறைக் கலாமன்றத்துக்கு

(மருதங்கேணி)

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தினால் வருடந்தோறும் வழங்கப்பட்டு வருகின்ற கலை இலக்கியப் பணிக்கான உயர் விருது இம்முறை திருமறைக் கலாமன்றத்துக்கு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக சங்கத்தின் தலைவர் பொன். சுகந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இவ் உயர்விருது கொழும்பு தமிழ்ச் சங்கத்திற்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. கலை இலக்கிய வளர்ச்சிக்கு சிறந்த சேவையாற்றி வருகின்ற அமைப்புக்களுக்கு ஆண்டு தோறும் இவ் உயரிய விருது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-3-35)

# அனுமதிப் பத்திரமின்றியும் மதுபோதையிலும் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

(கரவெட்டி)

தென்மராட்சி வரணி வடக்குப் பகுதியில் ஆவணங்களின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதிக்கு 12 ஆயிரத்து 500 ரூபாய் அபராதமும் செலுத்தத் தவறின் 4 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

இச்சம்பவத்தில் வரணி வடக்குப் பகுதியைச் சேர்ந்த மேற்படி சாரதி வாகன அனுமதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம், இறைவரிப் பத்திரம் ஆகியவை இன்றியும் மது போதையிலும் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியுள்ளார்.

கொடிகாமப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, சாரதி மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையினால் மேற்படி தொகையைச் செலுத்தத் தவறின் 4 மாத கால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஶ்ரீ-3-24)

## கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு இரண்டு மாடிக்கட்டம் நிர்மாணம்

(பருத்தித்துறை)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப் படவுள்ளது.

இசுறு திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ட இக்கல்லூரிக்கு காரியாலய நிர்வாக அலகுத் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக இக்கட்டடம் அமையவுள்ளது.

இக்கட்டட அமைப்பு வேலைகள் ஏப்ரல் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் வே.சிதம்பரம் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-3-10)

## ஓய்வூதியக் கொடுப்பனவு

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்ட ஓய்வூதியர்களுக்கான மார்ச் மாத ஓய்வூதியம் நாளை வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலகங்களில் இருந்து உரியவர்களுக்கு ஓய்வூதிய வவுச்சர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஶ்ரீ-3-10)

## யுனிசெப் நிறுவனத்தால் கொப்பிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த தேசிய மற்றும் தனியார் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளின் மாணவர்களிற்கு யுனிசெப் நிறுவனத்தால் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் கொப்பிகள் வழங்கப்படவுள்ளன.

அதிபர்கள் இவற்றைப் பெறுவதற்கு ஆவன செய்யுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-3)

## எக்ஸ்–ரே கவர்கள் தயாரித்து மாணவர்கள் அன்பளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட ஒரு தொகுதி எக்ஸ்–ரே கவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஒவ்வொரு மாதமும் மாணவர்கள் இதனைத் தயாரித்து வழங்கவுள்ளதாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-3-10)

## கார்த்திகை உற்சவம்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை கார்த்திகை விரத உற்சவம் இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தையொட்டி காலையில் விசேட அபிஷேகங்கள், பூசைகள் இடம் பெற்று மாலையில் முருகப் பெருமான் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். (ஶ்ரீ-3-19)

## கடமையிலிருந்து ஓய்வு

கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.தபேந்திரராஜா எதிர்வரும் 15ஆம் திகதி முதல் கடமையிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

அவருடைய வெற்றிடத்தை நிரப்பும் முகமாக நேர்முகப் பரீட்சையின் மூலம் புதிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவு செய்யப்பட்டு விரைவில் அறிவிக்கப்படுமென வடமராட்சி வலய உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஶ்ரீ-3-19)

## ஆசிரியர்களுக்கான தளபாடங்கள் கையளிப்பு

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தளபாடங்கள் யுனிசெப் நிறுவனத்தினால் கையளிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக ஒவ்வொரு பாடசாலைக்கும் 2 ஆசிரியர் மேசைகளும் 2 கதிரைகளும் வழங்கப்படவுள்ளதென வடமராட்சிக் வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (ஶ்ரீ-3-19)

## இளைஞர்களின் முன்மாதிரி நடவடிக்கைக்கு பாராட்டு

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட கதிரவேற்பிள்ளை வீதியின் ஒரு பகுதிக்கு அப்பகுதி இளைஞர்களால் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வீதியூடாகப் பயணிப்போர் இரவு நேரங்களில் பெரும் இன்னல்களை அனுபவிப்பதை உணர்ந்த இளைஞர்கள் இவ்வாறான முன்மாதிரி நடவடிக்கைகளில் ஈடுபட்டதையடுத்து அப்பகுதி மக்கள் அவர்களைப் பாராட்டியுள்ளனர். (ஶ்ரீ-3-10)

யாழ்.செய்திகள்

# மோட்டார் சைக்கிள்- உழவியந்திரம் விபத்தில் இளைஞர் படுகாயம்

(பருத்தித்துறை)

மோட்டார் சைக்கிள் ஒன்றில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவர் உழவியந்திரம் ஒன்றுடன் மோதியதில் காலில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியில் வல்லை மண்டான் பகுதியில் இடம்பெற்றது.

இதில் நெல்லியடி வடக்கைச் சேர்ந்த பொன்னம்பலநாதன் சஞ்சீவ் (வயது 23) என்பவரே படுகாயமடைந்து பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக் கப்பட்டார். (ஶ்ரீ-3-10-19-24)

# வடமராட்சி வலய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

வடமராட்சி வலய மட்டத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரங்கள் வருமாறு,

**15 வயதுப் பிரிவு (பெண்)**

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு (பெண்)**

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி மகா வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு (பெண்)**

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. (ஶ்ரீ-3-19)



வடமாகாணக் கல்வி அமைச்சும் வடமாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான திசைமுகப்படுத்தும் செயலமர்வு நேற்று யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது. இச்செயலமர்வில் பாடசாலை மேம்பாட்டு நிபுணத்துவ ஆலோசர் எஸ்.ஆனந்தராஜா உரையாற்றுவதனையும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் உட்பட வளவாளர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அளவறிந்து உண்

இந்த உலகத்தில் சாப்பிடாமல் கஷ்டப்படுபவர்களை விட சாப்பிட்டுவிட்டு கஷ்டப்படுபவர்கள்தான் அதிகம். அதாவது அதிகமாக சாப்பிட்டுவிட்டு அவஸ்தைப்படுபவர்கள்தான் அதிகம்.

ஆயுர்வேதம் என்ன சொல்கிறது தெரியுமா?

அளவறிந்து உண்ணுங்கள் என்று சொல்கிறது.

அந்த அளவு என்பது 2 விடயத்தைப் பொறுத்தது.

ஒரு ஆகாரம் உங்கள் கண்முன்னால் இருக்கிறது என்றால் அதற்கு முன் நீங்கள் இரண்டுவிடயத்தை யோசிக்க வேண்டும்.

முதலில் நம்முடைய ஜீரணசக்தி எவ்வளவு? அடுத்தது இந்த ஆகாரத்தின் ஜீரணசக்தி எவ்வளவு? என்று முடிவு செய்யவேண்டும்.

அதாவது இதை சாப்பிட்டால் இலகுவாக சமிபாடடையுமா? அல்லது சிரமப்பட்டுத்தான் சமிபாடடையுமா? என்று யோசிக்க வேண்டும்.

உதாரணத்திற்கு இனிப்புச்சுவையுள்ள உணவுப் பண்டங்கள், நெய்யில் சமைத்த உணவுவகைகள் என்பவற்றை அரைவயிறுக்கு மேல் சாப்பிடக்கூடாது.

இலகுவாக சமிபாடடையும் உணவுகளை மனதில் திருப்தி ஏற்படும் அளவுக்கு சாப்பிடலாம். அதுதான் அதற்கு அளவு.

ஆனால் கடினமான உணவுகளை அதிகமாக சாப்பிடக்கூடாது. ஆனால் தினமும் உடற்பயிற்சி செய்பவர்கள், இயல்பாகவே ஜீரணசக்தி உள்ளவர்கள் போன்றோர்க்கு எதுவும் பண்ணாது. இன்னொரு விடயம் உணவை அதிகமாக சாப்பிட்டாலும் தவறு. குறைவாக சாப்பிட்டாலும் தவறு என்கிறது ஆயுர்வேதம்.

அளவுக்கதிகமாக சாப்பிட்டால் உடம்பில் வாயு, பித்தம், கபம் மூன்றையும் அது அதிகமாக்கி விட்டு விடுமாம்.

அதனால் ஜீரணசக்தி குறைந்து நோய்கள் உண்டாகும். குறைவாக சாப்பிட்டால் பலம், நிறம் வளர்ச்சி, மனம், அறிவு புலன்களெல்லாம் பாதிக்கப்படுமாம். முக்கியமாக ஆகாரத்தை போதிய அளவுக்கு குறைத்து சாப்பிட்டால் அது எண்பது வகையான வாத நோய்களுக்கு காரணமாகிறது என்று சொல்கிறது ஆயுர்வேதம்.

அதனால் நாம் சாப்பிடும் ஆகாரம் அதிகமாகவும் கூடாது குறையவும் கூடாது.

சரி, அதை நாம் எப்படிக்கண்டு பிடிப்பது?

அளவோடு உண்ணும்போது உடலின் செயற்பாடுகள் ஒழுங்காக இருக்கும். அதாவது நிற்பது, உட்கார்வது, தூங்குவது, நடப்பது, மூச்சைஇழுப்பது, முச்சை வெளியில் விடுவது, சிரிப்பது, பேசுவது எல்லாம் சுலபமாக இருக்கும்.

இதையெல்லாம் நாம் சுகமாக உணர்ந்தால் நாம் சாப்பிடும் உணவின் அளவு கூடவோ குறையவோ இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

'ஒருகல்யாணத்துக்கு போயிருந்தேன் சேர். அருமையான சாப்பாடு. விலாப்புடைக்க சாப்பிட்டுவிட்டு வந்தேன்' என்று பெருமையாக சிலபேர் சொல்வதுண்டு. அதெல்லாம் மிகவும் தவறு.

மூச்சுமுட்ட சாப்பிட்டேன் என்று சொல்வார்கள் அதுவும் தவறு.

சாப்பிடுவதனால் நம் வயிற்றிலுள்ள சமிபாட்டு உறுப்புக்கள் பாதிப்படையக்கூடாது. அதனால் கை சாப்பாட்டுக்கு அருகில் போகும்போதெல்லாம் கவனமா இருக்க வேண்டும். இவ்வளவும் ஆயுர்வேத மருத்துவம் சொல்லும் ஆலோசனைகள்.

நம் ஊரில் ஒரு திருமண விருந்து நடந்து கொண்டிருந்தது.

பந்தியில் உட்கார்ந்து ஒருத்தர் மும்முரமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

''சேர் ... நான் இதற்கு முந்தின பந்தியிலேயும் உங்களைப் பார்த்தேனே'' என்றார் பரிமாறியவர்.

அதற்கு இவர் ''உங்களுக்கு ஞாபகசக்தி அதிகம். எனக்கு ஜீரண சக்தி அதிகம்'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வாகன விபத்தில் சாரதி பலி

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோயில் தாமரைக்குளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வாகனத்தை செலுத்திய சாரதி பலியானதுடன் ஒருவர் காயமடைந்த நிலையில் திருக்கோவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் திருக்கோவில் பிரதேசத்தை சேர்ந்த 32 வயதுடைய பா.இந்திரக்குமார் எனத் தெரியவருகிறது.குறித்த நபர் ஓட்டிச் சென்ற வாகனம் தனது கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர். (ஸ்ரீ-2)

# கோப்பாய்க்கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 11 ,12 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகும் விளையாட்டுப் போட்டியினை யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சண் தயாளன் ஆரம்பித்து வைப்பார். அத்துடன் மறுநாள் சனிக்கிழமை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பிப்பார்.

இதேவேளை இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு 5ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டி மேற்குறித்த மைதானத்தில் நடைபெறும்(ஸ்ரீ-2)

# க.பொ.த உயர்தர பரீட்சை விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைப்பு

(அல்வாய்)

இவ்வாண்டு நடைபெறவுள்ள கா.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பாடசாலைப் பரீட்சார்த்தியாக புதிய பாடத்திட்டத்தில் தோற்றும் மாணவர்கள் மட்டும் இவ் விண்ணப்பப் படிவத்தில் சேர்க்கப்படுவர்.

இரண்டாம் முறை பழைய பாடத்திட்டத்தில் தோற்றுவதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஏற்கனவே முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-19)

# சைவத்திருமுறைப் பயிற்சியும் சைவசித்தாந்தப் பயிற்சியும்

(கொழும்பு)

திருவாவடுதுறை ஆதீனம் நடத்தும் சைவத்திருமுறைப்பயிற்சி வகுப்பும் சைவசித்தாந்தப் பயிற்சி வகுப்பும் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கவுள்ளது. இவ் வகுப்புக்கள் மாதத்தின் முதலாம் மற்றும் மூன்றாம் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறும்.

இந்த வகுப்புக்களில் பயில்வதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு கடந்த மாதம் 27 ஆம் திகதி குரு மகா சன்னிதானம் திரு நீற்றுக் காப்பிட்டு உருத்திராக்கம் வழங்கி ஆசி நல்கி அருளுரையும் வழங்கியுள்ளார்.

புதிதாகச் சேரவிரும்புபவர்கள் அன்றையதினம் சமூகம் தந்து பெயர்களைப் பதிவு செய்து வகுப்புக்களில் பங்குபற்றலாம் என மேற்படி பயிற்சிமைய இயக்குநர் செ.நவநீதகுமார் தெரிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை 0779008286 இலக்க தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அறியலாம் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 190 | 200 | 180 | 180 |
| தக்காளி | 140 | 120 | 200 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 110 | 80 |
| கரட் | 110 | 180 | 200 | 150 |
| பூசணி | 70-80 | 70 | 80 | 80 |
| புடோல் | 70 | 80 | 90 | 100 |
| வாழைக்காய் | 40-50 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100-110 | 90 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 110 | 150 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 200 | 130 |
| கருணைக் கிழங்கு | - | 70 | 120 | - |
| பயற்றங்காய் | 80 | 160 | 180 | 230 |
| லீக்ஸ் | 110 | 150 | 160 | 150 |
| பீற்றூட் | 70 | 80 | 100 | 60 |
| கறிமிளகாய் | - | 200 | 180 | 170 |
| முருங்கைக்காய் | 500 | 600 | 600 | - |
| போஞ்சி | 120 | 130 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | - | 150 | 80 | 160 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 40 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-70 | 50 | 60 | 50 |

# இராசி பலன்

09.03.2011

(மாசி 25, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

சதுர்த்தி முற்பகல் 10.22மணிவரை

அச்சுவினி பிற்பகல் 12.25 மணிவரை

இராகுகாலம் 12.24-1.54மணிவரை

சுபநேரம் 4.54-6.24மணிவரை

விபூதிப் புதன்

**மேடம்** குடும்பத்தினர் உங்களின் முயற்சிக்கு பக்கபலமாக இருப்பர், சிலர்மீது காரணமில்லாது கோபப்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** சிந்தித்து செயற்படவேண்டிய நாள், பொறுப்பாக எந்த வேலையை செய்தாலும் குறை கேட்கநேரிடலாம், திடீர் பயணங்களால் விரயங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** இனிய செய்தி இல்லம்தேடி வரலாம், தொலைதூரப்பயணம் செல்ல போட்ட திட்டம் வெற்றி பெறும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், நண்பரின் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்கள் வகுப்பீர்கள்.

**சிங்கம்** தந்தைவழியில் ஏற்பட்ட தகராறுகள்விலகும், தவறிய காரியங்கள் நிறைவேறும், கொடுக்கல்-வாங்கல்கள் சீராகும், பயண நன்மையுண்டு.

**கன்னி** சஞ்சலங்கள் தீர கடவுளை வழிபடவேண்டிய நாள், வேலையில் உயர்அதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**துலாம்** உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், வருமானம் திருப்தி தரும், நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறலாம், கௌரவமான நிலை.

**விருச்சிகம்** பணவரவு திருப்திதரும், உடன்பிறப்புக்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வர், செய்தொழில் முன்னேற்றமுண்டு, உற்சாகமான நாள்.

**தனுசு** மாமன், மைத்துனர் வழியில் நன்மைகள் ஏற்படலாம், தொழில் விருத்தி உண்டு, புத்திரர்களின் தேவைகளை நிறைவு செய்வீர்கள்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, பெற்றோர்நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள், உறவினர் ஒருவர் நல்லயோசனைகள் சொல்லலாம்.

**கும்பம்** வேலையில் சிறுமனஉளைச்சல் ஏற்படலாம், உறவினர்களுக்கேற்ப நடந்து கொள்வீர்கள், எடுத்த காரியங்கள் கைகூடும், போசன சுகமுண்டு.

**மீனம்** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், குடும்பதேவைகள் நிறைவு செய்யப்படலாம், தனவரவு திருப்திதரும், விவாதிக்கும் நிலையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு சோலையம்பதி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளைவியாழக்கிழமை ஆரம்பமாகிதொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளன.

இதில் பத்தாம் நாளான எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு 108 அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் நடைபெற்று மாலை 5 மணிக்கு விசேட பூசையும் திருவூஞ்சலும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-9)

## மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

மாதனை மெ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2 மணியளவில் கண்ணகையம்மன் மைதானத்தில் பாடசாலை அதிபர் க.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ஸ்ரீ-3-19)

## அமைச்சர் பசில் ராஜபக்ஷ நெடுங்கேணிக்கு விஜயம்

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ எதிர்வரும் 11 ஆம் திகதி நெடுங்கேணிக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள அபிவிருத்திக்குழுக் கூட்டத்திற்கு அமைச்சர் தலைமை தாங்கவுள்ளார்.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட இப்பிரதேசத்தின் அபிவிருத்தி குறித்து கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக வவுனியா நகர சபையின் ஆளும்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அப்துல் பாரி சரீவ் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு விவகாரத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன் , வன்னி எம்.பி ஹுனைஸ் பாரூக் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2)

# இலங்கை விமானப்படைக்கு சீனவிமான படையின் நவீன தொழில்நுட்ப வசதிகள்



(கொழும்பு)

சீன விமானப்படையின் கட்டளைப் பணியகத்தின் தலைமைத் தளபதி மேஜர் ஜெனரல் டிங் லாய்ஹங் தலைமையிலான உயர் மட்டக் குழுவினர் கடந்த 5ஆம் திகதி இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்சல் ஹர்சா அபேவிக்கிரமவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

சீன விமானப்படையின் மூத்த அதிகாரிகளான கேணல் ஜியாங் லிசேங் , கேணல் சூகான் ஆகியோரும் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் இராஜதந்திர விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி ஹன் தாவோ இச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

இலங்கையின் விமானப் படைக்கு சீன விமானப் படையின் தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக்கொள்வது குறித்து இச் சந்திப்பில் ஆராயப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை இரத்மலானையில் நடைபெறும் இலங்கை விமானப்படையின் கண்காட்சியிலும் இவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இக் கண்காட்சிக் கூடத்தை சீனாவின் செங்டு விமானத் தயாரிப்பு நிறுவனம் அமைத்துள்ளது. 1991 ஆம் ஆண்டு இந் நிறுவனமே இலங்கை விமானப்படைக்கு எவ்-7 பேர் விமானத்தை விற்பனை செய்திருந்தது.

அத்துடன் இந்நிறுவனத்தின் புதிய தயாரிப்பான எவ்-17 பேர் விமானங்களை இலங்கை விமானப்படைக்கு விற்பனை செய்வதற்கான முயற்சிகளிலும் இக்குழுவினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இரத்மலானையில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சிக்கு கூடத்துக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்த நிறுவனத்தின் சார்பில் எவ்-17 போர் விமானத்தின் திறன்கள் குறித்து சீன அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

இலங்கை விமானப்படை சீனாவிடம் கொள்வனவு செய்த எவ்-7 போர் விமானங்களையும் கே-8 விமானங்களையும் பயன்படுத்தி வருவதுடன் சீனாவிடம் இருந்து மேலும் ஆறு போக்குவரத்து விமானங்களையும் கொள்வனவு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை பிரிவில் கழிவுப் பொருட்கள் போடப்படும் இடங்கள்

வலிமேற்கு பிரதேசசபைக்குட்பட்ட மக்கள் தமது வீடுகளில் சேரும் கழிவுப் பொருட்களை தத்தம் கிராம அலுவலர் பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் போடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வலி.மேற்கு பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற டெங்கு கட்டுப்பாட்டுக்குழு கூட்டத்தின் போது இவ் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது .

எனவே பொதுமக்கள் தமக்கு என ஒதுக்குப்பட்ட இடங்களில் கழிவுப்பொருட்களை போட்டு ஒத்துழைப்பு வழங்குமாறு வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார். கழிவுப் பொருட்கள் போடுவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்கள், கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வருமாறு ,

வட்டுகிழக்கில் வட்டுக்கோட்டை பிள்ளையார் கோயில் மடத்தடி அருகாமையிலும் வட்டு வடக்கில் டச்சுவீதி வட்டு வடக்கில் உள்ள ஆறுமுகப்பிள்ளை இரத்தினபூபதியின் காணியிலும் சங்கரத்தையில் சென்ஸ்ரார் விளையாட்டுக்கழக காணியின் ஒரு பகுதியிலும் வட்டு தெற்கில் வட்டு தெற்கு ஐக்கிய நன்மை விருத்தி சங் கத்திற்குரிய காணியிலும் வட்டு தென்மேற்கில் வலிமேற்கு பிரதேசசபையின் சந்தைக்கு அருகில் உள்ள குப்பை போடும் இடத்திலும் மற்றும் வட்டு மேற்கில் உரிய வீதி , வட்டு மேற்கிலுள்ள மாதர்சங்க காணியிலும் குப்பை போடுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சங்கானை கிழக்கில் கப்பண்டா முகாமிற்கு அருகிலுள்ள பகுதியிலும் சங்கானை தெற்கு சலேசியார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள சு.தனராசா என்பவரின் காணியிலும் சங்கானை மத்தியில் விளா வெளி மயானம் அமைந்துள்ள காணியின் விளான் வீதிப் பக்கமாகவும் சங்கானை மேற்கில் மானியவத்தையிலும் மற்றும் தொல்புரம் மேற்கில் டச்சு வீதித் தொல் புரத்திலுள்ள பிரதேச சபை காணியிலும் குப்பைகளை கொட்டுவதற்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

மேலும் மூளாய்பகுதியில் மூளாய் மீன் சந்தைக்கு மேற்கு பக்கத்திலுள்ள காணியிலும் மற்றும் மாவடி மூளாய் வீதியில் சைவப் பிரகாச பாடசாலைக்கு செல்லும் முகப்பில் அமைந்த காணியிலும் சுழிபுரம் மேற்கில் சுழிபுரம் மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்திற்கு அருகாமையிலும் மற்றும் சுழிபுரம் மத்தியில் சுழிபுரம் மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்திற்கு அருகாமையிலும் குப்பைகள் போடப்பட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் கிழக்கு சூரிய வளவிலுள்ள ப.அருணாசலத்தின் காணியிலும் பண்ணாகத்திற்கு, வழக்கம்பரை அம்மன் கோவிலுக்கு வடக்கு பக்கத்தில் அமைந்துள்ள காணியிலும் மற்றும் சித்தங்கேணி பகுதியினருக்கு சிவன் கோவில் வீதி சித்தன்கேணியிலுள்ள க.நாகேஸ்வரனின் காணியிலும் குப்பைகளைக் கொட்டுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் அராலி மேற்கு பகுதியில் முத்தமிழ் கிராம எல்லையிலும் அராலி மத்திக்கு வேலங்காடு மயானத்திற்கு அருகாமையிலும் அராலி தெற்கிற்கு பூனாவோடை சுடலைக் கேணியடியிலும் அராலி கிழக்கிற்கு அராலி கேணிக்கு அருகிலுள்ள காணியிலும் மற்றும் அராலி வடக்கிற்கு அராலி வடக்கு சுடலையின் வடக்குப் பகுதியிலும் குப்பைகளை மக்கள் போடுவதற்கு இட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

## விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

விசுவமடு சுண்டிக்குளம் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை துவிச்சக்கர வண்டியுடன் மோதுண்டதிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த சிங்கராசா லோஜீவன் (வயது 28) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

துவிச்சக்கரவண்டியில் பயணித்தவர் சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளார். (ஸ்ரீ-6)







வடமாகாண கல்வி பண்பாட்டுத்துறை விளையாட்டு அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ். மாநகராட்சி மன்றமும் இணைந்து நேற்று சர்வதேச மகளிர் தினத்தை வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தியது. இதில் கலாநிதி மனோன்மணிசண்முகதாஸ், கலாநிதி எஸ்.திருநாவுக்கரசு ஆகியோர் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் அருளை தவக்காலம் பெற்றுத்தரட்டும்.





அறிவியலின் அசுர வளர்ச்சி இன்று அகிலத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிற இத்தருணத்தில் இறைவனைத் தேடி கூடி ஓடவேண்டும் என்று நற்செய்தி நாநிலமெங்கும் ஒலிக்கின்றது. இன்று கத்தோலிக்கர்கள் திருவழிபாட்டு ஆண்டுச்சக்கரத்தின் தவக்காலம் என்னும் காலத்துக்குள் நுழைகிறார்கள்.

தவக்காலம் என்பது இறை விருப்பத்தை வாழ்வில் ஏற்று அதன்படி வாழ்ந்து கடவுளோடும் மனிதரோடும் ஒப்புரவாவதற்கான காலமே தவக்காலம் எனலாம். நாம் அனைவரும் மீண்டும் ஒருமுறை எம்ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தி வலுப்படுத்தி வளப்படுத்த வல்லதேவன்தரும் காலமே தவக்காலம் என்று உறுதியாகக் கூறலாம்.

இப்புதனை திருநீற்றுப்புதன் என்று கத்தோலிக்கர் அழைப்பர். இன்றைய தினம் திருப்பலிப்பூசையில் பங்கு கொள்பவரின் நெற்றியில் அவர்கள் மண்ணுக்குரியவர்கள் மண்ணுக்கே திரும்ப வேண்டும் என்பதை நினைவு படுத்துவதற்கெ சிலுவை அடையாளம் சாம்பலால் இடப்படுகிறது.

சாம்பல் மனமாற்றத்தைக்குறிக்கும் ஓர் அடையாளமாக திருவிவிலியத்தில் பயன்படுத்தப்படுகிறது. பரமனுக்கு தொலைவில் இருந்த நினிவே மக்கள் இறைவனின் தண்டனையிலிருந்து தப்பி அவரோடு தம்மை ஐக்கியப் படுத்திக்கொள்வதற்காக மனம் மாறுகையில் சாக்கு உடை உடுத்திக்கொண்டு சாம்பலின் மீது உட்கார்ந்தார்கள் என்று திருவிவிலியம் (யோனா4:6) கூறுகிறது.

யோவேல் (யோவே2.13) "நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் முழு இதயத்தோடு திரும்பி வாருங்கள்" என்றார். இறைவனுக்கு ஏற்புடைய இதயத்தை நாம் உருவாக்க மூன்று வழிகள் உள்ளன. இறைவேண்டல், நோன்பு, தர்மம் என்று நற்செய்தி கூறுகிறது.

யேசுவை நம்பி ஏற்போரிடத்தில் துலங்க வேண்டிய பண்புகளாக யுத சமயத்தில் முக்கியமான அறநெறியாகக் கருதப்பட்ட இறை வேண்டல் நோன்பு, தர்மம் ஆகியன எத்தகைய மனநிலையோடு நிறைவேற்றப்பட வேண்டும்? இக்கேள்விகளுக்கு யேசு தன் மலைப் பொழிவுப் போதனையில் (மத்5:1-12)



பதில் தருகிறார். இறைவேண்டல் கடவுளோடு உள்ள உறவை மென்மேலும் வலுப்படுத்தி அவரிலே நிலைத்திருந்து கடவுளைச் சார்ந்து வழிநடக்கச் செய்கிறது. நோன்பு எமது தனிவாழ்வில் நிறைந்து கிடக்கும் தேவையற்ற, பயன் தராத பகுதிகளைக் குறைத்து எம்மை சுயகட்டுப்பாடு கொண்டவர்களாக மாற்றுகிறது. எம்மைப் புரிந்து கொண்டு வாழ்வில் வரும் துன்பங்களை ஏற்றுக் கொள்ள வலிமை தருகிறது.

தர்மம் செய்வது உயர்ந்த பண்பு எனவும் தர்மம் செய்யாது இருப்பது தவறு எனவும் திருச்சட்டம் இஸ்ரயேலருக்கு உணர்த்தியது போல் நமக்கும் உணர்த்துகிறது. இயேசு "நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள்... செய்வார்" (மத்6:2) என்றார். பிறருக்கு ஒருவர் தாராள உள்ளத்தோடு உதவலாம் அதனால் பிறர் அவனைப் புகழ்ந்து பாராட்டவேண்டும் என அவர் விரும்பிச் செய்தால் கைமாறு ஏற்கெனவே கிடைத்து விட்டது. அவ்வாறு அவர் செய்யும் உதவி வெறும் வெளிவேடம் என இயேசு கூறுகிறார். தர்மம் எந்த நோக்கத்தோடு செய்கிறோம் என நர்ம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். பிறர் நம்மைப்புகழ வேண்டும் என்பது நமது நோக்கமாக இராமல் கடவுள் நம்செயலைப் பார்க்கிறார், கடவுளது கைமாறு கிடைக்கும் என்பதற்காகவன்றி, நாம் செய்யும் தர்மம் கடவுளுக்கு உகந்தது எனவும் பிறருக்கு நலம் பயப்பது எனவும் நமக்கு தெரிந்தால் அதுவே போதும் என இயேசு கற்பிக்கிறார்.

நோன்பு, இறைவேண்டல், தர்மம் ஆகியவை தலைசிறந்த அறச் செயல்களாக கருதப்பட்டன. இயேசு இவைகளின் சிறப்பை மறுத்துக்கூறவில்லை. அறச்செயல்கள் வெளிவேடமாக இருக்கும் பட்சத்தில் அவற்றால் ஒரு வேளை பிறர் நலமடைந்தாலும் நாம் நலமடையப்போவதில்லை. இதற்கு நம் உள்ளத்தில் தூய்மையும் நேர்மையும் ஓங்கிவிளங்க வேண்டும். இவை நாம் கடவுளோடும் நம்மோடும் பிறரோடும் ஒப்புரவு கொண்டு உறவுகளை வளர்க்க உதவ வேண்டும். அப்போதுதான் நாம் தொடங்குகிற தவக்காலம் நமக்குக் கடவுளின் அருளைப் பெற்றுத்தருகின்ற தருணமாக இருக்கும்.

மனநல மருத்துவரான James T.Fletcher என்பவரால் 1951 இல் எழுதப்பட்ட "A Few Buttons Missing" (ஒருசில பொத்தான்களைக் காணோம்) என்னும் புத்தகத்தின் இறுதிப்பக்கங்களில் அவர்வாழ்வில் கற்ற சில பாடங்களைத் தொகுத்துத் தந்துள்ளார். அப்பாடங்களில் ஒன்று இயேசுவின் மலைப் பொழிவைப் பற்றியது. "உலகின் புகழ்பெற்ற மனநல மருத்துவர்கள் அறிஞர்கள் கூறியுள்ள அனைத்துக் கருத்துக்களையும் ஒன்று திரட்டுவோம். அவைகளில் உள்ள தேவையற்ற வார்த்தைகளை எல்லாம் எடுத்துவிடுவோம். மனநலம் பற்றி ஆடம்பரம் அற்ற, கலப்படமற்ற உண்மைகளை எல்லாம் திரட்டினால் அவற்றில் யேசு போதித்த மலைப்பொழிவின் சில பகுதிகளையாவது காணலாம்" என்று அவர் கூறுகிறார். அமெரிக்காவின் 33வது அரசுத்தலைவராக இருந்த Harry Truman "மலைப் பொழிவுதரும் பாடங்களினால் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் அமெரிக்க ஐக்கிய நாட்டிலோ, உலகிலோ இல்லை" என ஒருமுறை கூறினார். கிறிஸ்தவம், சமயம் என்ற எல்லையைக் கடந்து உலகத்தலைவர்களை, பெரும் அறிஞர்களைக் கவர்ந்துள்ள இயேசுவின் மலைப்பொழிவை இத்தவக்காலத்தில் வாழ்வாக்குவோம்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

# வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை

**செண்பகம்**

Botanical Name - Michelia champaca
Family - Magnoliaceae
Engl - Golden champa
Sinh - Hapu

செண்பக மரமானது உயரமான பெரிய பசுமையான தொன்றாகும். 30 மீட்டர் உயரமும், 35 மீட்டர் பருமனும் கொண்டதாகும், இதன் அடிமரம் உருளை வடிவானதும் பட்டை பழுப்பு நிறம் கட்டை மிருதுவானதும், மேற்புரம் வெண்மையானது, இலைகள் நுனி நீண்டவை, வாள் வடிவின, இலைமடல் அகன்றது, 20 தொடக்கம் 25 செ.மீ நீளமும், 4 செ.மீ அகலமுடையது. மலர்கள் மஞ்சள் அல்லது செம்மஞ்சள் நிறமானது. நறுமணம் மிக்கவை, 10க்கும் மேற்பட்ட அல்லி இதழ்கள் காணப்படும். ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புக்கள் எண்ணற்றவை. கனிகள் கொத்தாக அமைந்தவை. ஒன்று தொடக்கம் 4 விதைகள் கொண்டலை கரும் பழுப்பு நிறம் கொண்டவை பூக்களை சித்திரை மாதத்திலிருந்து புரட்டாதி மாதம் வரையான காலப் பகுதியில் காணலாம்.

**இனவிருத்தியும், பரம்பலும் :**

சீனா, ஜப்பான் ஆகிய நாட்டை இம்மரம் தாயகமாகக் கொண்டது. மிகுவெப்ப இமாலயம் பகுதிகளின் மலைகளில் காணப்படுகின்றது. யாழ்மாவட்டத்தில் கோயில்களில் வளர்க்கப்படுகின்றது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

**மருத்துவப் பயன்கள்:**

இதன் மொட்டு, பூ, இலை, பட்டை, விதை ஆகியன மருத்துவகுணங்களைக் கொண்டு காணப்படும், அத்துடன் பூக்கள் மிகுந்த நறுமணங்கொண்டவை.

* இதன் பட்டைகளை சிதைத்து சிறுசிறு துண்டுகளாக்கி 60 கிராம் அளவு எடுத்து 960 மில்லி நீர்விட்டு 120 மில்லி ஆக வற்றக் காய்ச்ச வேண்டும். பின்பு 30 தொடக்கம் 60 மில்லி அளவு காலை, மாலை கொடுக்க இடைவிட்டுவரும் காய்ச்சல் நன்கு தணியும் சிறுநீரும் நன்கு வெளியேறும்.
* இதன் வேர்ப்பட்டைகளை சேகரித்து சிறு சிறு துண்டுகளாக சிதைத்து 30 கிராம் அளவு எடுத்து 480 மில்லி நீர்விட்டு 60 மில்லி ஆக காய்ச்ச வேண்டும். பின்பு 30 மில்லி அளவு காலை, மாலை கொடுக்க மாதவிடாய் காலத்து இரத்தப்போக்கு ஒழுங்காகும்.



* செண்பகப்பூக்களை ஒரு கைப்பிடியளவு எடுத்து ஒரு டம்ளர் குளிர்ந்த நீரில் ஒரு இரவு முழுவதும் ஊறவிட்டு மறுநாட் காலை வடித்து அருந்திவர வயிற்றுப் புண், ஓங்காளம் முதலியன தீரும். இவ்வாறு தொடர்ந்து 40 நாட்கள் அருந்தி வரலாம்.
* இதன்பூக்களைசேகரித்துநல்லெண்ணெய் விட்டு பிசைந்து தலைநோய், கண்நோய், மூக்கடைப்பு முதலியவற்றிற்கு நெற்றியில் பற்றிடலாம். இதையே மூட்டுகளில் ஏற்படும், வீக்கம், வலி போன்றவற்றிற்கும் உடலுக்கும் தடவலாம்.
* இதன் இலைக்கு நெய்தடவி அதில் ஓமத்தூளை தூவி, தலையில் வைத்துக்கட்ட தலைக்கு அதிக குளிர்ச்சியைத் தந்து வெப்பத்தினால் உண்டாகும் தலை நோயைத் தடுக்கும்.
* இதன் விதைகளைச் சேகரித்து அதிலிருந்து பெறப்படும் செண்பகவிதை எண்ணெயானது பித்தவெடிப்பிற்கு சிறந்தது. இளஞ்சூட்டு நீரால் பித்தவெடிப்புள்ள இடங்களைக் கழுவி ஈரப்பற்று நீங்கியவுடன் செண்பகவிதை எண்ணெயை பித்தவெடிப்பிற்கு தினமும் இரு வேளை பூசிவர பித்தவெடிப்பு நீங்கும்.
* இதன் பூக்களிலிருந்து தயாரிக்கப்படும் நறுமணமுடைய அத்தரானது உடலின் வியர்வை நாற்றங்களை நீக்கவல்லது.

**கோடைகாலத்திற்கு ஏற்றகுளியல்பொடி :-**

| | |
|---|---|
| செண்பக வேர் | - 100 கிராம் |
| செண்பகப் பூ | - 100 கிராம் |
| கஸ்தூரி மஞ்சள் | - 100 கிராம் |
| வெட்டி வேர் | - 100 கிராம் |
| இச்சிலிக்கிழங்கு | - 100 கிராம் |
| பூலாங் கிழங்கு | - 100 கிராம் |
| கோரைக் கிழங்கு | - 100 கிராம் |
| பச்சைப் பயறு | - 100 கிராம் |
| மகிழம் பூ | - 100 கிராம் |
| றோஸ் ரோஜா மொட்டு | - 100 கிராம் |

மேற்கண்ட 10 பொருட்களையும் ஒன்றாகக் கலந்து உலர்த்தி இடித்து அரித்து எடுக்க வேண்டும் தினசரி காலையில் குளிக்கும் போது உடல்முழுவதும் பூசி ½ மணிநேரம் ஊறவிட்டு குளியல்செய்தால் வியர்வைநாற்றம் நீங்கி, உடல் மினுமினுப்பாக வருவதுடன் தோல் வியாதிகள் வராமல் தடுக்கவும் உதவும்.

* நொச்சியிலைச்சாறு 100 மில்லி, நல்லெண்ணெய் 100 மில்லி, செண்பக மொட்டு 5 கிராம் ஆகியவற்றை அரைத்து ஒன்றாகச் சேர்த்து எண்ணெய் காய்ச்சி தலைக்கும், நெற்றியிலும் பூசிவர தலைப்பாரம், பீனிசம் ஆகிய நோய்கள் அகலும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஸ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத் துறை,
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் மகளிர் தின நிகழ்வுகள்

(கொழும்பு)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் பெண்கள் கௌரவ மான தொழில் வாய்ப்பில் சம வாய்ப்பு, சம அந்தஸ்தைப் பெறும் வகையில் இவ் வருடத்திற்கான மகளிர் தினம் நாளை வியா ழக்கிழமை காலை 9.30 மணிக்கு தியாகி அறக்கொடை மண்ட பத்தில் மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்,சிறப்பு விருந்தினராக யாழ். பல் கலைக்கழக ஓய்வுபெற்ற பதிவாளர் திருமதி த.நாகேந்திரராணி, வைத்திய கலாநிதி திருமதி பவானி, அரச சார்பற்ற நிறுவனங்க ளின் இணையத் தலைவர் வி.கேசவன்,வைத்திய கலாநிதி திருமதி சி.சிறிரஞ்சினி, தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் திருமதி தனலக்ஷ்மி வில்வநாதன் , யாழ்.மாநகர சபை உறுப்பினர் பி.எ. எஸ். சுபியான் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

## கந்தபுராணம் தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பண்ணாகம் விசவத்தனை முருக மூர்த்தி கோயில் மகோற்சவத்தை முன் னிட்டு பண்ணாகம் அண்ணா கலை மன் றம் நடாத்தும் ***கந்தபுராணம்*** எனும் தொடர் சொற்பொழிவு கோயில் முன்றலில் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை வரை ஒவ்வொரு நாளும் மாலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி ரங்கநாதப் பெரு மாள் கோவில் சிவஞானவாரிதி அமிர்த லஷ்மிகாந்தன் சொற்பொழிவாற்றவுள் ளார். (ஸ்ரீ-9)

## கும்பாபிஷேக சிறப்புமலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை அருள்மிகு ஆதி வைரவர் தேவஸ்தான புனருத்தாரண மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடு இன்று புதன்கிழமை 11 மணிக்கு வல்வை ஆதி வைரவர் தேவஸ்தானத் தில் கோயில் பரிபாலன சபையின் தலைவர் மு. சாமிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 45 ஆவதுநாள் ஆகமக் கிரியைகள் காலை 9 மணி தொடக்கம் 11 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து சிறப்புமலர் வெளியீட்ட வைபவம் இடம்பெறும். இந்நிகழ்வில் சிறப்பு மலரை வல்வை முத்துமாரி அம்மன் கோவில் பிரதம குரு வெளியிட்டு வைக்க முதற் பிரதியை ஜெயசண்ஜன் நிறுவன உரிமையாளர் க. சண்முகநாதன் பெற்றுக் கொள்வார். (ஸ்ரீ-9)

## மரண அறிவித்தல்

### யூலியஸ் ஏனெஸ் ஜெயநேசசிங்கம் ஜோசப்



கோண்டாவிலை பிறப்பிட மாகவும், ஏழாலை தெற்கு, ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஏனெஸ் ஜோசப் கடந்த 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெபரட்ண சிங்கம் சார்ள்ஸ்ஜோசப் - அலின் ரட்ணமலர் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், கமலாதேவி யின் அன்புக்கணவரும், றொசான் (கொழும்பு), ருக்ஷன் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்றவர்களான ரெஜீ ஜோசப் (மலேசியா), பேர்ட்டி ஜோசப், ஜோர்ஜ் ஜோசப், சுகந்தமலர், நவரட்ணம் மற்றும் பசில் ஜோசப் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அனோஜா (கொழும்பு) வின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நேற்று (08.03.2011) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று ஏழாலை தெற்கு சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"நிம்பதி"
ஏழாலைதெற்கு,
ஏழாலை.
தொ.பே: 0775350821

தகவல் :
மனைவி, பிள்ளைகள்,

(சி-2609)

# உணவுப் பொருட்களுக்கான விலைகள் வெகுவாக உயர்வடையக் கூடும்

## அரசாங்கம் எதிர்வுகூறல்

(கொழும்பு)

உணவுப் பொருட்களுக்கான விலைகள் வெகுவாக உயர்வடையக் கூடுமென அரசாங்கம் எதிர்வு கூறியுள்ளது.

சில நாடுகளில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்த நிலைமைகளினால் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கான விலைகள் அதிகரிக்கக் கூடுமென சுட்டிக் காட்டியுள்ளது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஐரோப் பிய ஒன்றிய நாடுகள் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய் யப்படும் உணவுப் பொருட்களுக்கான விலை அதிகரிக்கக் கூடுமென தெரிவிக்கப் பட்டுள்ளது.

மழை வெள்ளம், நிலநடுக்கம், காட்டுத் தீ , வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்க ளினால் குறித்த நாடுகள் பாதிக்கப்பட்டுள் ளதாகவும் இதனால் குறித்த நாடுகளிலி ருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்க ளுக்கான விலைகள் உயர்வடையக் கூடு மென அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரி வித்துள்ளார்.

இதேவேளை மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் இடம்பெற்று வரும் கிளர்ச்சிகள் தொடர்பில் அரசாங்கம் உன் னிப்பாக அவதானித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் தற்போது நிலவும் சூழ்நிலை யினால் இதுவரையில் எரிபொருளுக்கான விலைகள் உயர்வடையவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி யின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் ஒருளளளள- மணிக்கு பாடசாலை மைதானத்தில் கல்லூரி அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள் ளார். (ஸ்ரீ-3-30)

# சீனாவிடமிருந்து மாத்திரமல்ல; வேறுபல நாடுகளிலிருந்தும் ஆயுதக்கொள்வனவு

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள மேற்குலக நாடு களின் சில தூதரகங்கள் பொருளாதார நட வடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் அமைச்சர்களுக்கு விசா வழங்க மறுத்ததாகவும் பயங்கரவாதிகளுக்கும் பயங்கரவாத சந்தேக நபர்களுக்கும் அவை விசா அனுமதியை வழங்கியதாகவும் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

பிரான்ஸில் வெளியாகும் எஸ்ட் பிரண்டே பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக செயற்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அதன் செயற்பாட்டாளர்களுக்கு நிதி உதவிகள் கிடைப்பதில்லை. இதனால் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த அமைப்புக் கள் இலங்கையின் மனித உரிமைகள் மீறப்படுவதாக தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கம்,சீனாவிடம் இருந்து மாத்திரம் அல்ல ,இந்தியா ,ரஷ்யா, உக்ரைன்,கங்கேரி,இஸ்ரேல் ஆகிய நாடுக ளிடம் இருந்தும் ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டதாகவும் அது இரகசியமான விடயம் அல்ல எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பு தோற்கடிக் கப்பட்ட பின்னர் பயங்கரவாதக் குழுவினர் பிரித்தானியாவுக்கும் கனடாவுக்கும் தப்பிச் சென்றதாகவும் மேற்குலக நாடுகள் புலிக ளின் செயற்பாடுகளுக்கு எதிராக நட வடிக்கை எடுப்பதில்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)



கிளி/பள்ளிக்குடா அ.த.க. பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வு பெற்ற கிளிநொச்சி வலய ஆரம்ப கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் பொன். தில்லைநாதன், பாடசாலை அதிபர் ம.அருளானந்தம் ஆகியோர் மாண வர்கள் மற்றும் பெற்றோரால் அழைத்துவரப்படுவதை படத்தில் காணலாம்.
(படம்:-பூநகரி செய்தியாளர்)

## லிபியாவில் இருந்து வெளியேறிவரும் இலங்கையர்களுக்கு உதவிகள்

லிபியாவில் இருந்து வெளியேறிவரும் இலங்கையர்களுக்கு டுபாயில் உள்ள இலங் கைத் தூதரகம் உதவி வழங்கி வருகின்றது. லிபியாவில் இருந்து டுபாய் சர்வதேச விமான நிலையத்திற்கு ஊடாக கடந்த ஒரு வார காலத்திற்குள் சுமார் 200 இலங் கையர்கள் வெளியேறியுள்ளனர்.


மேலும் பலர் எதிர்வரும் நாட்களில் டுபாய் விமான நிலையம் ஊடாக இலங்கை வர வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு டுபாய் விமான நிலையத்தின் ஊடாக வருகை தரும் இலங்கையருக்கு இலங்கைத் தூதரகம் உதவி வழங்கி வருகின் றது. லிபியாவில் இருந்து டுபாய் விமான நிலையம் ஊடாக ஒரு வார காலத்தில் ஆயி ரம் இந்தியர்களும் 400 வியட்நாம் நாட்ட வர்களும் வெளியேறியுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

பல நாடுகளில் தூதரகங்களின் அதிகாரி களும் லிபியாவில் இருந்து வரும் பிரஜைக ளுக்கான உணவுமற்றும் ஏனைய பொருட்களு டன் விமான நிலையத்திற்குச் செல்வதாக தெரி விக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்



59



## கவிப்பேரரசு வைரமுத்து

மாடு கன்ட வித்து, வீட்டுத் தகரத்தப் பிரிச்சு வித்து கெணறு வெட்டித் தவிச்சுப் போன பித்துக்காலுப் பெருமாளு பூத்துப் பூரிச்சுப் போனாரு.

எல்லாரையும் பேசவிட்டுக் கேட்டுக் கிட்டேயிருந்துட்டு குடுத்த காசுக்குக் கொற வந்திரக் கூடாதேன்னு ஒனக்காச்சு எனக் காச்சுன்னு மூச்சுள்ள மட்டும் பீடியை ஒரு கடைசி இழு இழுத்து எறிஞ்சுட்டு, அதக் கால்ல போட்டு மிதிச்சுக்கிட்டு, அங்கேயே காறியும் துப்பிட்டு, பெருந்தொண்டையில பேச ஆரம்பிச்சாரு சைக்கிள்தேவர்.

"ஏம்ப்பா! பேப்பயகளாச் சேந்து பேசுறீகளேப்பா! யப்பா செவத்தவீரா! காடுகர இருந்தாத்தான வெளையும்? ஏலே! செம்பட்ட! மாடு கன்டு இருந்தாத்தானடா தண்ணி குடிக்கும்? ஏலே! பித்துக்காலு பெருமாளு! கெணறே முங்கிப் போச்சுன்னா ஊத்து எதுக்கு ஊத்து? பேசுறாய்ங்க பாரு பேச்சு... படிக்காத பட்டிக்காட்டுப் பயலுக."

சைக்கிள் தேவர் பேசப் பேசக் கூட்டத்தில் ஒருவன் கடுப்பானான்.

"இவரு பெரிய பத்தாங்கிளாசு படிச்சவரு... ஏய்யா குண்டக்கா மண்டக்காக் குறுக்குச்சால் ஓட்ற? பின்பக்கமா ஏன் பெடல் போடுற? பேசுறத நேராப் பேசு. நம்மூர்ல அண கட்றது நல்லதா? கெட்டதா?"

"அம்பதுமைல் நூறுமைல் தூரத்துல இருக்கிறவனுக்கு அணகட்றது நல்லதப்பா. அஞ்சுமைல் பத்துமைல் தூரத்துல இருக்கிறவனுக்கு அணகட்றது கெட்டதப்பா"

"எப்பிடி... என்ன கெடுதி வந்திரும்...?"

"அண கட்னா தண்ணி தேங்குமா இல்லையா?"

"தேங்கும்"

"தண்ணி தேங்குற எடமெல்லாம் முங்குமா இல்லையா?"

"முங்கும்"

"அதுல கள்ளிப்பட்டியும் முங்கப் போகுதடா களவாணிப் பயலுகளா!

"கள்ளிப்பட்டி முங்கப் போகுதா?"

வேற வேற வயசுகொண்ட தொண்டையில ஒரே கேள்வி.

"கள்ளிப்பட்டி மட்டுமா? நம்ம சாராங்கத்துல இருக்கிற பத்துப் பன்னண்டு ஊர்களும் மொத்தமா முங்கப்போகு தாமப்பா. ஆண்டிபட்டி தேனியெல்லாம் இதானப்பா பேச்சு."

"போடா போடா கேணப்பயலே. அண கட்றதாவது... ஊரு முங்குறதாவது... மாட்டுக் கோமியம் பேஞ்சா மல முங்கப் போகுது? ஆன வருது புலி வருதும்பாக... கடைசியில அரட்டாவள (தவளை) கூட வராது."

"ஏ ஒன்றக் கண்ணுப் பெருசு... சைக்கிள்தேவர் சொல்றத மெதமா நெனைக்காதப்பா. சர்க்காரு ஏவாரம் சரியாயிருக்கும். அண கட்டுறது மெய்யாயிருந்தா நாம பூமிய விட்டுப் போக வேண்டியதாத்தான் இருக்கும்."

"அதெல்லாம் நடக்குற காரியமா? நாம அன்னாடம் கும்புடறசாமி நம்மள ஆத்துல விட்டுருமா? விடாதப்பா. அவுக அண கட்டுவாகளா? கட்டிப் பாக்கட்டும். முத்தாலம்மன் கையில வேல் எதுக்கு இருக்கு? பலியாடு தின்டுட்டுப் பல்லுக்குத்தவா? ஒரே எறி எறிஞ்சு அணைய ஒடைச்சுவிட்டுட்டுப் போயிராதா? வெட்டிப் பேச்சுப் பேசாம வேலயப் பாருங்கப்பா. போங்கப்பா. போங்க"

ஊருக்குள்ள இந்தப் பேச்சு நடந்துக்கிட்டிருக்கப்ப, வெயில் தாங்காம துண்ட ரெண்டா மடிச்சுத் தலையில போட்டுக்கிட்டுத் தெக்குக் காட்டுல கத்திரிச் செடிக்குக் களையெடுத்துக்கிட்டிருந்தாரு பேயத்தேவர்.

ஏழெட்டு மாசத்துல எல்லாம் தீர்மானமாகிப் போச்சு. சகலத்தையும் அளந்து சர்வே பண்ணி இன்னதுக்கு இன்னதுன்னு எழுதிக் கணக்கெடுத்துப்பிட்டாங்க 'சர்வே' ஸ்வரன்ங்க. பெரியாறு அணை பெருகி வைகையாத்துல வர்ற தண்ணியைத் தேக்கி வைக்க எழுபத்திரெண்டு அடி உயரம் போதும்ன்னு குழாய்ச்சட்டைகளும் தொப்பிகளும் கூடி முடிவெடுத்ததுக.

'மத்திய நிலத்தடி நீர்க்கழகம்'ன்னு ஒண்ணு இருக்காமில்ல.. இந்தியா பூரா எங்க தண்ணி இருக்கு எங்கபாறை இருக்குன்னு அங்க ஒரு 'மேப்'பு இருக்காம். அதுல மதுர ஜில்லா மேப்ப வாங்கியாந்து அங்கிட்டும் இங்கிட்டும் ஓட்டிப் பாத்ததுல இந்தக் கரட்டுக் காட்டுப் பள்ளத் துலதான் ஆயிரம் அடி நீளத்துக்குப் பாறை இருக்குன்னு கண்டுபுடிச்சாகளாம். எந்த ஒரு அணையும் பூமிக்கு அடியில இருக்கிற ஒரு பெரும்பாறைமேலதான் நிக்கணுமாம். இல்லாட்டித் தேக்கி வச்ச தண்ணி போறேன் போறேன்னு பூமிக்கு அடியிலயே போயிடுமாம்.

அண தாங்குற பாறை-ஆறு போறபாதை- அணையை முட்டிச் சேக்கிற கரடு- தண்ணியத் தேக்கி வைக்க ஒரு இருபது சதுர மைலுக்குச் சும்மா வெள்ள வேட்டிய விரிச்சுக் காயப் போட்டது மாதிரி வெட்டவெளி -சர்க்கார் நெனைச்ச மாதிரியே சகலத்துக்கும் பொருத்தமான எடம் அதான்னு முடிவாகிப்போச்சு. ஒரே ஒரு சின்ன எடஞ்சல்; பருவப் பொண்ணு மூஞ்சியில பருவந்தமாதிரி அங்கொண்ணும் இங்கொண்ணுமா 'பட்டி'க பத்துப் பன்னெண்டு இருக்கு.

அவுகள வெளியேத்தணும். 'மாட்டேன்'னு மல்லுக்கட்டவா போறாக? அரசாங்கத்த மீறி ஆடுமாடுக என்னபண்ணும்? போன்னா கழுதைக 'போ'யிட்டுப் போகுதுக.

அதிகாரிக யாரும் அந்த ஊரு ஆளுகள மனுசக் கூட்டமாவே மதிக்கல. சனநாயகம் மாதிரி தெரியிற சர்வாதிகாரம்தான அரசாங்கம்!

'அணகட்டப் போறாகளாம்! அணகட்டப் போறாகளாம்!'ன்னு பேசிப் பேசிச் சலிச்சுப் போன சனங்க 'வாரபோது வரட்டும்! நம்ம வேலய நம்ம பாப்பம்'ன்னு அவுகவுக பொழப்பப் பாக்க ஆரம்பிச்சாக. உழுகிறவன் உழுகிறான். வெதைக்கிறவன் வெதைக்கிறான். காடுகரை பாக்க, மாடு கன்டு மேய்க்க இருக்கப்பட்ட மகராசன்ங்க கறிச்சாறு ஊத்தி, நெல்லுச்சோறு திங்க- இல்லாத பக்கிக கோரக் கெழங்கப் புடுங்கியாந்து வெந்நியில போட்டு வேகவச்சுத் திங்க- கல்யாணம் காதுகுத்து விசேசமெல்லாம் அது அதுபாட்ல அப்பப்ப நடக்க- காலம் சும்மா ஓடுதய்யா நாலுகால் பாய்ச்சல்ல.

"அண கட்டப் போறது நிச்சயம்; ஆனா ஊர் முங்குறது நிச்சயமில்ல"ங்கிற நம்பிக்கையில இருந்தாரு பேயத்தேவரு. கத்திரிவித்து மொளகா வித்து இந்தா இந்தான்னு நெருக்கி மூவாயிரம் ரூவா சேத்துட்டாரு. 'அந்த வைரவனும் சீலக் காரியும் மட்டும் வழிவிட்டா இல்லைன்னு போன தோட்டம் என்னது ஆயிராதா? நாயக்கரு வப்பாட்டியக் கையெடுத்துக் கும்பிட்டு. துட்டு இந்தா தாயி- தோட்டத்தக் குடுத்திருன்னு மீட்ற மாட்டனா?' அழுக்குப் புடிச்ச ரூவாய்களையும் அழுக்குப் புடிக்காத கனவுகளையும் அடிமடியில கட்டிப் பாத்திரமாப் பாதுகாத்துக்கிட்டே வந்தாரு பேயத்தேவர்.

ஆடுமாடு மேய்க்கிற ஆணுக்கும் பொண்ணுக்கும் மத்தியில ஒரே அலம்பல் சலம்பல்தான். கரட்டுல என்னமோ அதிசயம். நடக்குதாம். கொழா கொழாயாக் கொடையுற மெசின் வந்து எறங்கியிருக்காம். டப்பு டப்பு டப்புன்னு டீசல்ல ஓடுதாம். சும்மா பூமிக்குள்ள புகுந்து ஆதிசேசன் தலையைத் தேடி அலையுதாம். கல்லையும் மண்ணையும் கடிச்சுத் துப்புதாம். அது உள்ள புகுந்து கொடகொடன்னு கொடையறதப்பாத்தா நம்மூருக் கெணத்துத் தண்ணி ஊத்தெல்லாம் ஏகமா அங்க ஓடி எந்திருச்சிரும் போலயிருக்கு. அம்பதடிக்கு ஒரு குழியா- பத்து எடத்துல போடுறாங்களாம்.

ஒரு சர்க்கார் இஞ்சினியரும், மண் ஆராய்ச்சிபண்ற ஒரு அதிகாரியும், கண்ணக்காட்னா கையக் காட்னா 'தொசுக் தொசுக்கு'ன்னு ஓடி வர்ற ஏழெட்டு எடுபிடிகளுமா ரவ்வும் பகலும் அந்த எடத்துல ஒரே வேல ஓயாமா நடக்குதாம்.

தொளைகருவி போட்ட எடத்துல தொளைப்பான் கருவி செலுத்தி, பூமிக்குக் கீழே எத்தன அடியில பாறை இருக்குன்னு கண்டுபிடிக்கிற பூர்வாங்க வேலதான் அவுக இப்பப் பாக்குறது. மண்கண்டம் தாண்டி- மணல் கண்டம் தாண்டி- கரும்பாறை கண்ட எடத்துல 'நொங்கு'ன்னு ஒக்காரும் தொளைப்பான் கருவி. ஆகா பாறை வந்திருச்சேன்னு சாமி கும்பிட்டு சந்தோஷப் பட்டுர முடியாது.

*(வளரும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/மகாஜனாக்கல்லூரியின் 3 மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட படை அதிகாரி மேஜர் ஜெனரல் என்.ஜே.வல்ஹம கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பா.பாலமுரளி)

# இந்தியாவுடன் சீபா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது குறித்து கவனம்



## அமைச்சர் ரிஷாட்பதியுதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுடன் சீபா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவது குறித்து இலங்கை கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவுடன் சீபா ஒப்பந்தம் கைச்சாத்திடுவது குறித்த ஆவணங்கள் விரைவில் தயாரிக்கப்படும் என கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தம் குறித்த உத்தேச வரைவுத் திட்டம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் தற்போது அமுலில் உள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை விஸ்தரிக்கும் வகையில் சீபா ஒப்பந்தம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ள முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த உடன்படிக்கையின் மூலம் இந்தியாவிற்கு கூடுதல் சாதகத் தன்மை ஏற்படும் என பொருளியல் நோக்கர்கள் அறிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# ஐ.நா.நிபுணர் குழுவின் இறுதி அறிக்கையை பகிரங்கப்படுத்துவது குறித்து தீர்மானமில்லை

## குழுவின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவின் இறுதி அறிக்கையை பகிரங்கப்படுத்துவது குறித்து இன்னமும் தீர்மானிக்கப் படவில்லை என குழுவின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்கி தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான இறுதி அறிக்கையை பகிரங்கப்படுத்துவதா அல்லது பொதுச் செயலாளரிடம் மட்டும் சமர்ப்பிப்பதா என்பது தொடர்பில் இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் இந்த மாதத்தில் நிபுணர்கள் குழு இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு தமது பணிகளை சுயாதீனமான முறையில் மேற்கொள்ளும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு திருப்தி

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் நியமித்துள்ள கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு திருப்தி வெளியிட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதவாது,

இலங்கைக்கு அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர். இதன்போது ஐரோப்பிய தூதுக்குழுவின் மூன்று உறுப்பினர்களை நான் சந்தித்து பேச்சு நடத்தினேன்.

இந் நிலையில் இலங்கை அரசாங்கம் நியமித்துள்ள கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு தொடர்பில் அவர்கள் திருப்தி வெளியிட்டனர். அதன் இறுதி அறிக்கை கிடைக்கும் வரை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். அவை நடைமுறைப்படுத்தப்படும்.

மேலும் கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு தொடர்பில் நம்பிக்கையுடன் இருப்பதாக அமெ



ரிக்காவின் ரொபேட் பிளேக் தெரிவித்துள்ளதாகவே நாங்கள் அறிகின்றோம்.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நாங்கள் நடத்தி வருகின்றோம். இதுவரை ஆறு பிரதான சம்மேளனங்கள் முடிந்துவிட்டன. இறுதி சம்மேளனக் கூட்டம் 14 ஆம் திகதி அம்பாந்தோட்டையில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# லிபிய விவகாரம் குறித்து பிரேசில்-இலங்கை பேச்சு

லிபிய விவகாரம் குறித்து பிரேசில் வெளிவிவகார அமைச்சர் இலங்கை வெளி விவகார அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

லிபியாவில் இடம்பெற்று வரும் வன்முறைகள் குறித்து பிரேசில் அதிருப்தி அடைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அன்டனியோ பாட்ரியோட்டா தெரிவித்துள்ளார்.

லிபிய விவகாரம் குறித்து பிரேசில், இலங்கை உள்ளிட்ட சர்வதேச நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

லிபியாவில் அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் நடைபெறும் என பிரேசில் எதிர்பார்ப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் மத்திய கிழக்கு நாடுகளின் நிலைமைகள் குறித்து இந்திய இராஜதரந்திரிகளுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யுத்தத்தின் பின்னரான இலங்கை நிலைமைகள் குறித்து திருப்தி அடைவதாக பிரேசில் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் அலரிமாளிகைளில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான விசா நடைமுறைகளில் தளர்வு உள்ளிட்ட பல்வேறு இரு தரப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிராந்தியத்தின் வலுவான பொருளாதார மையமாக இலங்கையை மாற்றியமைப்பதே தமது எதிர்பார்ப்பு என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த சந்திப்பின் போது தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வடமாகாண பாடசாலைகளுக்கு தமிழ் அகராதிகள் வழங்க நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வடமாகாணத்திலுள்ள இரண்டாம் தர பாடசாலைகளுக்கு தமிழ் அகராதிகளை விநியோகிக்கவென 20 இலட்சம் ரூபா நிதியை வடமாகாண சபை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தியாவிலிருந்து இந்த தமிழ் அகராதிகள் கொண்டுவரப்படவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் தெரிவித்தார்.

வடக்கில் உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மாணவ , மாணவிகளின் நலனைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்திலுள்ள 557 இரண்டாம் தர பாடசாலைகளுக்கு இந்த அகராதிகள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் 125ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சதாசிவன் மலர் வெளியீடும் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் மாணவர்களின் இசை நிகழ்வினையும் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# புகலிடக் கோரிக்கையாளர்கள் பலர் இத்தாலி நோக்கி படையெடுப்பு

(கொழும்பு)

ஆயிரக்கணக்கான வட ஆபிரிக்க புகலிடக் கோரிக்கையாளர்கள் இத்தாலியில் சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் ஆயிரம் வட ஆபிரிக்க புகலிடக் கோரிக்கையாளர்கள் நேற்று முன்தினம் இத்தாலியின் லாம்டுசா தீவில் சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. துனிசியா மற்றும் லிபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகளவில் இத்தாலியில் சரணாகதி அடைவதாகவும் இவர்கள் படகுகளின் மூலம் இத்தாலித் தீவுகளை அடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவிலான புகலிடக் கோரிக்கையாளர்கள் படையெடுப்பதனால் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக இத்தாலி ஐரோப்பிய ஒன்றியத்திடம் அறிவித்துள்ளது.

லாம்டுசா தீவில் 850பேர் தங்குவதற்கான வசதிகளே காணப்படுவதாகவும் பெருமளவிலான புகலிடக் கோரிக்கையாளர்கள் புகலிடம் கோரியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஏற்கனவே குறித்த தீவில் 6 ஆயிரம் துனிசியர்கள் புகலிடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லிபியாவின் நிலைமைகள் மோசமடைந்து வருவதாகவும் பெரும் எண்ணிக்கையிலான புகலிடக் கோரிக்கையாளர்கள் ஐரோப்பிய நாடுகளை நோக்கிப் படையெடுக்கக் கூடும் எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2)

# திருகோணமலையில் முதலாவது இசுறு பாடசாலை திறந்து வைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் விசேட ஆலோசனையின் படி மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் ஆயிரம் பாடசாலைகளை சகல வசதிகளுடன் கூடிய பாடசாலையாகத் தரம் உயர்த்துவதற்கான புதிய திட்டம் ஒன்று இசுறு என அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ் இசுறுத் திட்டத்தின் கீழ் திருமலையில் முதலாவது இசுறு பாடசாலை நேற்று முன்தினம் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் , கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரது பங்குபற்றுதலுடன் திறந்து வைக்கப்பட்டது.

திருமலை முள்ளிப் பொத்தானை பிரதேசத்தில் அமைந்துள்ள சிராஜ் முஸ்லிம் மகா வித்தியாலயம் நேற்று முன்தினம் இசுறு பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

40 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த பாடசாலையே இசுறு வேலைத் திட்டத்தின் கீழ் முதலாவதாக அமைக்கப்பட்டுள்ள முஸ்லிம் பாடசாலை ஆகும். (ஸ்ரீ-2)

# வெளிநாட்டுத் தூதுவர் பதவிகளில் புதியவர்களை நியமிக்கத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் வெளிநாட்டுத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கத் தவறியவர்களைத் திரும்ப அழைத்துக் கொள்வது தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது.

மேற்கத்தேய நாடுகளில் மீண்டும் வலுப்பட்டு வரும் விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாடுகள் காரணமாக அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கம் அனைத்துத் தூதுவர்களுக்கும் பணிப்புரை விடுத்திருந்தது.

ஆயினும் சில நாடுகளின் தூதுவர்கள் அதிலிருந்து தவறியுள்ளதாக அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதையடுத்தே தற்போது அவர்களுடைய இடங்களுக்குப் பதிலாகப் புதிய தூதுவர்களை நியமிப் பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

அதன்போது தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கும் புதிதாகத் தூதுவர் நியமனங்கள் கிடைக்கலாம் என்று கூறப்படுகின்றது. தற்போதைக்கு வெளிநாட்டமைச்சில் பணிபுரியும் டீ.ரவீந்திரன் மற்றும் அசீஸ் உள்ளிட்ட இன்னும் பலர் அவ்வாறு புதிய தூதுவர்களாக நியமிக்கப்படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ், முஸ்லிம் தூதுவர்களைக் கொண்டே மேற்கத்தேய நாடுகளில் அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளைக் கட்டுக்குள் கொண்டுவரமுடியும் என்று அரசாங்கம் கருதுவதே அதற்கான காரணம் என்று தெரிகின்றது. (ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட குருநகர் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை குருநகர் ஐந்து மாடிக்கட்டடத்திலும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை புதிய வீடமைப்புத் திட்டத்திலும் (பெஸ்கி சனசமூக நிலையம்) வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமது வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.03 09

☆ 1847 - ஐக்கிய அமெரிக்காவின் படைகள் ஜெனரல் வின்ஃபீல்ட் ஸ்கொட் தலைமையில் மெக்சிக்கோவைத் தாக்கினர்.

☆ 1919 - எகிப்தில் 1919 புரட்சி வெடித்தது.

☆ 1923 - விளாடிமிர் லெனினுக்கு மூன்றாம் தடவையாக மாரடைப்பு ஏற்பட்டது.

☆ 1945 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்க பி-29 போர் விமானங்கள் டோக்கியோவில் குண்டுகளை வீசியதில் ஏற்பட்ட தீயினால் ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டனர்.

☆ 1956 - ஜோர்ஜியாவில் இடம்பெற்ற மாபெரும் மக்கள் எதிர்ப்புப் போராட்டம் சோவியத் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது.

☆ 1959 - பார்பி பொம்மை முதன் முதலாக விற்பனைக்கு வந்தது.

☆ 1967 - ஜோசப் ஸ்டாலினின் மகள் சிவெட்லானா அலிலுயேவா ஐக்கிய அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்றார்.

☆ 1976 - இத்தாலியின் டிறெண்டோ என்ற இடத்தில் ஆகாயத்தில் நகர்ந்து கொண்டிருந்த கேபிள் வாகனம் கீழே விழுந்து 15 பிள்ளைகள் உட்பட 42 பேர் கொல்லப்பட்டனர்.

☆ 1986 - சலேஞ்சர் விண்ணோடத்தின் அழிந்த சிதைவுகளை ஐக்கிய அமெரிக்காவின் ஆழ்கடலோடிகள் கண்டுபிடித்தனர். இறந்த ஏழு விண்வெளி வீரர்களினதும் உடல்கள் உள்ளே இருந்தன.

☆ 2006 - சனியின் துணைக்கோளான என்செலாடசில் திரவ நிலையில் நீர் கண்டுபிடிக்கப்பட்டது.

## பிறப்புகள்

☆ 1923 - வால்ட்டர் கோன், நோபல் பரிசு பெற்றவர்

☆ 1934 - யூரி ககாரின், விண்வெளி சென்ற முதலாவது மனிதர் (இ. 1968)

☆ 1943 - பாபி ஃபிஷர், அமெரிக்க சதுரங்க மேதை (இ. 2008)

☆ 1954 - பொபி சாண்ட்ஸ், ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த தன்னார்வலர் (இ. 1981)


## இறப்புகள்

☆ 1974 - ஏர்ல் சதர்லாண்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1915)

☆ 1983 - ஊல்ஃப்வொன் இயூலர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1905)

☆ 1992 - மெனாச்சிம் பெகின், இஸ்ரேலியப் பிரதமர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1913)

☆ 1997 - நொடோரியஸ் பி.ஐ.ஜி., ராப் இசைக் கலைஞர் (பி. 1972)



1957 - அலாஸ்காவில் அண்ட்றியானொவ் தீவுகளில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் பலத்த சேதமும் ஆழிப் பேரலையும் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு என்பது அடிப்படை புத்திசாலித்தனம்!

வெற்றியைப்பற்றிக் கவலைப் படாமல் செய்வதைத் தீவிரமான விருப்பத்துடன் செய்யுங்கள் என்று ஏன் சொல்கிறேன்? வெற்றியை எதிர்பார்க்கும்போதே, அது கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சமும் நிழல்போலத்தொடர்ந்து வரும். எதிர்பார்ப்பு எங்கே இருந்தாலும் அங்கே ஏமாற்றத்துக்கும் தயாராக இருக்க வேண்டும். எங்கே ஏமாற்றம் இருக்கிறதோ அங்கே எரிச்சல் தானாகவே வேகத்தடையாகக் குறுக்கிடும். காத்திருக்கப் பொறுமையில்லாமல் கவனம் சிதறும்.

வெற்றிக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் தருகிறீர்கள் என்று யோசியுங்கள். எதைச்செய்ய வேண்டியிருந்தாலும், இதனால் எனக்கு என்ன பலன் கிடைக்கும் என்றுதான் மனம் முதலில் கணக்குப்போடுகிறது. வெற்றிபோல் ஏதாவது ஒன்று வசீகரித்து உங்களை முன்னால் இழுக்க வேண்டும். அல்லது, தோல்விபோல் ஏதாவது ஒன்று பயமுறுத்திப் பின்னால் இருந்து உந்தித் தள்ள வேண்டும்.

கவனமாகப் பாருங்கள். வெற்றியும் தோல்வியும் ஒரே நாணயத்தின் இரு வேறு பக்கங்கள்தான். தனித்தனியே பிரிக்கமுடியாதவை. சுண்டிவிட்ட நாணயத்தின் எந்தப்பக்கம் விழப்போகிறது. என்பது புரியாமல் அந்தப்பதற்றத்தில் வாழ்கையை நடத்துவது உங்களுக்குப் பழக்கமாகிவிட்டது. அந்தப் படபடப்பை ரசிக்கக் கற்றுக் கொண்டு விட்டீர்களே தவிர முடிவு எப்படி இருந்தாலும் ரசிக்கக் கற்றுக் கொள்ளவில்லை.

நீங்கள் நெருக்கமாக நினைப்பவருடன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளக்கூடத் தயாராகத்தான் இருப்பீர்கள். ஆனால், பதிலுக்கு அவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று உங்களுக்கு எதிர்பார்ப்புக்கள் இருந்தால், அங்கே ஏமாற்றத்துக்கான வாய்ப்புக்கள் அதிகம்.

ஒரேயொரு காரியம் உங்களுக்குத் தெரியாமல் மறைத்து அவர் செய்வதைக் கவனித்து விட்டால் அவர்மீது வைத்த நம்பிக்கை போய், மனதில் படக்கென்று சந்தேகம் முளைவிடும். எனவே, உங்களுக்கு மிக நெருக்கமானவர்களிடம்கூட எதிர்பார்ப்புக்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். அதற்காக நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இல்லாமல் வாழ்க்கையை எப்படி நடத்த முடியும்? அதுவும் தீவிரமாக! ஒரே வழிதான் இருக்கிறது... அதன்பேர் அன்பு! ஒரு தாய் குழந்தையிடம் காட்டும் பிரியத்தில் முழுமையான தீவிரம் இருக்கும். ஆனால், எதிர்பார்ப்பு இருக்காது.

இரண்டாம் உலகப்போர் நடந்த நேரம் ஜேர்மனியில் சிறைகள் நிரம்பி வழிந்தன. ஒரு குறிப்பிட்ட சிறை முகாமில் , கூடுதலாக இருக்கும் கைதிகளில் சிலரக்கு மரணதண்டனை கொடுத்து, எண்ணிக்கையைக் குறைக்க முடிவானது. கைதிகள் எல்லோருக்கும் எண்கள் கொடுக்கப்பட்டன. தினமும் சில எண்கள் அழைக்கப்பட்டன. அந்த எண்களுக்குரியவர்கள் மரணமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

அப்படியொரு நாள், ரிச்சர்டு என்ற ஒரு கைதியின் எண் அழைக்கப்பட்டது. அவன் சாக விரும்பவில்லை. எனவே, நடுக்கத்துடன் ஒழிந்திருந்தான் அவனுக்குப்பக்கத்தில் கைதியாக வந்திருந்த ஓர் இளம்பாதிரியார் இருந்தார். "உனக்குச் சாக விருப்பம் இல்லையென்றால், நம் எண்களை மாற்றிக்கொள்வோம். உன்னிடத்தில் நான் போகிறேன்" என்றார், அவர் புன்னகையுடன்.

அதற்கு சம்மதிப்பது ரிச்சர்டுக்கு உறுத்தலாக இருந்தாலும், உயிர்மீது பாதிரியார் மரண மேடைக்கு எந்தத் தயக்கமும் இல்லாமல் போனார். சுட்டுக்கொல்லப்பட்டார். அன்றைக்கு இராத்திரியே அந்தப்பகுதியில் ஜேர்மனி போரில் தோற்றது. கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். ரிச்சர்டு அதற்குப்பின் பலவருடங்கள் உயிர்வாழ்ந்தான். அவனுடைய உயிர் இன்னொருத்தர் போட்ட பிச்சை என்ற எண்ணம் அவன் மனதை வாட்டியது.

அந்தப்பாதிரியார் அவனுடைய நண்பன் அல்ல உறவினர் அல்ல அவர் பெயர்கூட ரிச்சர்டுக்குத் தெரியாது. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அடுத்தவருக்காகத் தன் உயிரையே விருப்பத்துடன் கொடுக்க அவரால் எப்படி முடிந்தது? 'அந்தப்பாதிரியார் இறந்து விட்டாலும், வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்து விட்டார். தான் உயிருடன் பிழைத்திருந்தாலும் முழுமையாக வாழவில்லை' என்று ரிச்சர்டு உள்ளுக்குள் உணர்ந்தான்.

இதைச்சொன்னதால் உங்களை இதே போல் யாருக்காவது உயிரைத் தியாகம் செய்யுங்கள் என்று நான் சொல்லவில்லை. அந்தப்பாதிரியார் தியாகம் என்று நினைத்து எதையும் செய்யவில்லை. அன்பின் அர்த்தத்தை உணர்ந்திருந்தார். அடுத்தவரின் அச்சத்தையும் துன்பத்தையும் களைய அந்தச் சந்தர்ப்பத்தில் செய்யக்கூடியதை எதிர்பார்ப்பில்லாமல் செய்தார். எதிர்பார்ப்பில்லாமல் எதையாவது தீவிரமாகச் செய்ய வேண்டும் என்றால், அதன்மீது பிரியம் வைக்க வேண்டும். நீங்கள் கவனித்திருக்கலாம்... மிகுந்த அறிவாளிகளாக இருப்பவர்களுக்கு



## ஆன்மீகம் 39

அடுத்தவரிடத்தில் அன்பாகச் சிரித்துப்பேசக் கூடத்தெரியாது. அன்பாக இருக்கச் சொன்னால் எதற்காக என்று கேட்பார்கள். பலனைத்தெரிந்து கொள்ளாமல் செயற்பட மறுப்பார்கள். அன்பாக இருப்பது தான் அடிப்படைப்புத்திசாலித்தனமென்பது கூட அவர்களுக்குத் தெரிவதில்லை. முடிவைப் பற்றிய சிந்தனைஇல்லாமல், செய்வதை முழுமையான பிரியத்துடன் செய்துபாருங்கள். வெற்றியை நினைக்காமல் முழு அர்ப்பணிப்புடன் செய்து பாருங்கள்.

வெற்றியை எதிர்பார்க்காததால், தோல்விபற்றிய பயம் வராது. பயமில்லாத இடத்தில் பதற்றம் இருக்காது. பதற்றமில்லாத இடத்தில் கவனம் சிதறாது. கவனம் சிதறாத போது செய்வதிலேயே மகிழ்ச்சி கிடைக்கும். மகிழ்ச்சியுடன் செயற்படும் போது முழுத்திறமையும் வெளிப்பட்டால், வெற்றி நிச்சயம்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# தமிழ் நாவல்கள் சில நோக்கங்கள்

**04**



இவற்றில் வீரசிங்கன் கவனத்துக்குரிய நாவலாகும். இந்த நாவலை சி.வை. தாமோதரம்பிள்ளையின் சகோதரர் எழுதியுள்ளார். 'ஈழத்துப் பின்னணியில் எழுதப்பட்ட முதல் நாவல் என்ற வகையில் வீரசிங்கன் நூல் முதன்மை பெறுகின்றது' என்கிறார் சுப்பிரமணிஐயர்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

1914 ஆம் ஆண்டு இலங்கையின் மங்களநாயகி தம்பையாவினால் 'நொருங்குண்ட இதயம்' என்றொரு அற்புதமான படைப்பு வெளிவந்தது. ஈழத்தின் முதல் பெண் எழுத்தாளர் மங்களநாயகி தம்பையா ஆவார். 1928 ஆம் ஆண்டுடன் ஆரணி குப்புசாமி முதலியாரின் நாவல்களுடன் தமிழ் நாவல் இலக்கியத்தின் ஓர் இருண்ட காலம் ஆரம்பமாகிறது. ஆனால் இக்காலகட்டத்தில் ஈழத்தில் காத்திரமான நான்கு நாவல்கள் தமிழ் நாவலிலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பனவாகவெளிவந்துள்ளன என்பதை மறக்க முடியாது. மங்களநாயகி தம்பையாவின் நொருங்குண்ட இதயம் (1914), இடைக்காடரின் நீலகண்டன் (1925), எஸ் . தம்பிமுத்துப்பிள்ளையின் அழகவல்லி (1926), ம.வே. திருஞானசம்பந்தபிள்ளையின் கோபாலநேசரத்தினம் (1927) என்பன அப்பெருமை தரும் நாவல்களாகும்.இந்த நாவல்கள் இந்த மண்ணின் பல நிலைமைகளையும் சமூகத்தில் யதார்த்தநிலையையும் மண்வாசனையையும் பேசியுள்ளன. இந்தச் சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்ற தொலைநோக்கினை அவை தம்முள் கொண்டிருக்கின்றன. கலைநயத்தடன் கூடிய சமூகத்தேடலும் செய்திகளும் இந்த நாவல்களில் விரவிக் காணப்படுகின்றன. நல்லதொரு நாவலின் ஆக்கக்கூறுகளை நொருங்குண்ட இதயம் கொண்டிருக்கிறது. ஒழுக்கம்சார் அறநெறிகள் வேதநாயகம்பிள்ளை காலநாவல்களில் காணக்கூடிய பொதுப்பண்பாகும்.

மாயூரம் வேதநாயகம்பிள்ளையின் காலத்தில் தமிழின் ஆரம்பநாவல்கள் தோன்றின. நூற்றுக்கணக்கான நாவல்கள் எழுதப்பட்டு வெளிவந்துள்ள போதிலும் பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம், தீனதயாளு என்பன தமிழ் நாவல் இலக்கியத்தில் ஆரம்ப நாவல்களாக தோன்றுகின்றன. அவற்றோடு நொருங்குண்ட இதயமும் சேர்த்து நோக்கப்படலாம்.

***1.5 ஆரணி குப்புசாமிமுதலியார் காலம்***

இருபதாம் நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டு ஆரம்பத்தமிழ் நாவல் இலக்கியத்தில் வீழ்ச்சிக் காலமாகும். இது ஆரணிகுப்புசாமி முதலியாரின் காலமாகும். புற்றீசல்கள் போல ஆயிரக்கணக்கான கதைப்புத்தகங்கள் நாவல் என்ற பெயரில் வெளிவந்தன. இந்த யுகத்தை ஆரம்பித்து வைத்த பெருமை ஆரணியருக்கே சேரும் வாசகர்களின் மலின உணர்ச்சிக்குத் தீனிபோடும் நூலாக அவை அமைந்தன. கொலை, கொள்ளை, திருட்டு போன்ற குற்றச் செயல்கள் நாவல்களின் கருப்பொருளாக அமைந்து துப்பறியும் கதைகளாகவும் தழுவல் நாவல்களாகவும் மொழிபெயர்ப்பு நாவல்களாகவும் மலிந்தன. இந்த வீழ்ச்சிக்காலத்தில் கதைகளில் செங்கோலோச்சியவர்கள் ஆரணிகுப்புசாமிமுதலியார், வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார், ஜே. ஆர். ரங்கராஜு ஆகிய மூவர் ஆவார். இவர்களின் நூல்கள் அக்கால வாசகர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன.

தமிழ்நாவல்கள் என்ற பெயரில் தங்குதடையின்றி நூல்கள் பலராலும் எழுதப்பட்டு வெளிவந்தன. மர்ம பண்பு, பேய்பிசாசு, பாலுணர்வு, மாயாஜாலம் எனப் பலவும் இவற்றில் இடம் கொண்டன. யாரும் எழுதலாம் என்ற அபாயமான நிலை உருவாகியது. பெண்மணிகளும் தம்பங்குக்கு இந்த நீரோடையில் சேர்ந்து கொண்டார்கள். பண்டிதை விசாலாட்சி அம்பாள் நாவலாசிரியை எனக்கூறிக் கொண்டு கௌரி,ஞானரஞ்சினி, ஆரியகுமாரி, வனஸஜாதா, லலிதாங்கினி, ஜலஜாச்சி முதலான பதிநான்கு நூல்களைத்தந்தார்.அவை இந்த மண்ணைவிட்டு காலதேச வர்த்தமானங்களைக் கடந்து உலவின. அறநெறி விரிவுரைகளை இந்தக்கதைகளில் செய்தார். வை.மு. கோதைநாயகி அம்பாள் இவ்விடத்தில் மிகமுக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர். அறுபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களை நாவல்களென வெளியிட்டு வாசகர்களைப் படிக்கவைத்தார். அவர்களுடைய நூல்களில் துப்பறியும் பண்புகள் பரவிவந்தன. சாருலோசனா, தயாநிதி, வீரவசந்தா, சாமளநாதன் , உணர்ச்சி வெள்ளம், பட்டமோபட்டம், சாந்தகுமாரி, இதய ஒலி என இவரின் நூற்பட்டியல்நீளும்.

*(தொடரும்)*

**கலாநிதி செங்கைஆழியான் க.குணராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் பாவத்தின் அற்புத இரகசியங்கள்

ஆறாம் பாவம் என்பது பொதுவாக , பிரச்சினைக்குரிய இடமாக பலரால் கருதப்படுகிறது. ஏனென்றால் ஜோதிட சாஸ்திரப்படி கடன், ரோகம், விரோதம் போன்ற பிரச்சினைக்கு ஆறாம் இடத்தை முக்கியமாக எடுத்துக் கொள்வதால் இவ்வாறு கருதப்படுகிறது.


அதே நேரத்தில், தொழில் வளர்ச்சிக்கும், கோடிக்கணக்கான பணம் கடன் பெறுவதற்கும், கோடிக்கணக்கில் நஷ்டம் அடைந்தவர்கள் அந்தப் பிரச்சினையில் இருந்து மீண்டு வருவதற்கும், தீராத நோயில் சிக்கியவர்கள் அதிலிருந்து மீண்டு வருவதற்கும் இந்த ஆறாம் இடமே முக்கியமாக ஆராயப்பட வேண்டிய இடம் ஆகும்.

விரோதிகளை அதிகம் பெற்றவர்கள் கூட அவர்களை வெற்றி கொண்டு, பலமடையவும், நீதிமன்ற வழக்குகளில் பிரச்சினைகளை சமாளிக்கவும் ஆறாம் இடம் நன்கு கவனிக்கப்பட வேண்டும்.

பொதுவாக, சூரியன் ஆறாம் இடத்தில் இருந்தால் உறவுகள் குறைவாக இருக்கும். விரோதிகள் அதிகம் உண்டு. உண்ணக் கூடிய உணவுப் பொருட்கள் அதிகம் இருக்கும். மத்திம வயதில் கண்களுக்குத் தொல்லை உண்டு. அல்லது, விபத்தால் கண்களில் பாதிப்பு உண்டாகும். நல்ல கிரகங்கள் பார்வையிட்டால் அதிலிருந்து மீள முடியும். எதிரிகளை வீழ்த்தக் கூடிய மற்றும் விஷங்களை இறக்கக் கூடிய மந்திரங்களை ஜெபிப்பார். புகழையும் அடைவர். உடலில் ஏதாவதொரு இடத்தில் வியாதி உண்டு. அதே நேரத்தில், உஷ்ணம் சம்பந்தமான தாக்கம் எப்போதும் இருக்கும். இவரது ஜாதகத்தில் ஆறுக்குடையவனுடன் சுப கிரகத்துடன் சேர்ந்திருந்தால் நோயில் இருந்து மீண்டு, நல்ல ஆரோக்கியத்தை மீண்டும் அடைவர்.

ஆறுக்குடையவன் பலவீனமடைந்தால் சத்ருக்கள் ஓடிவிடுவார்கள். இவர் அரசியல் தலைவர்களுடன் நெருக்கமாக இருப்பார். சபையில் கௌரவத்தை அடைவார்.

சந்திர பகவான் ஆறாம் இடத்தில் இருந்தால், பணத்தட்டுப்பாடு, நெருக்கடி உண்டாகும். 30 வயதிற்கு மேல் விதவைப் பெண் உதவியால் தொழிலில் முன்னேறுவார். சந்திரன் பாவக்கிரகத்துடன் சேர்ந்தால் தர்மத்திற்கு விரோதமான தொழில் ஏற்படும். (அன்னத்தை விற்பதும், தனத்தை விற்பதும், செய்த தானத்தை திரும்பப் பெறுவதும், வட்டிக்குப் பணம் கொடுப்பதும், ஏழைகளின் உழைப்பால் ஜீவிப்பதும்- இப்படிப் பல விடயங்கள் தர்மத்திற்கு விரோதமாக சொல்லப் பட்டுள்ளன)




சந்திரன், இராகு, கேது கூடியிருந்தால் பொருளாதார நெருக்கடி இருந்து கொண்டே இருக்கும். அதேநேரத்தில், வாகன சௌக்கியத்தை அடைவர். சகோதரர்களிடமிருந்து விலகி நிற்பர். நீர் நிலைகளில் சிறுசிறு விபத்துக்களை சந்திப்பர். மூச்சு சம்பந்தப்பட்ட வியாதி உண்டாகும். சந்திரன் பூரண பலம் அடைந்தால் சகல ஜீவித இலாபத்தையும் அடைவர்.

அங்காரக பகவான் ஆறாமிடத்தில் இருந்தால் எடுத்த காரியத்தை திறமையாக முடிப்பார். புகழ் பெறுவார். இவரது சத்ருக்கள் இவரைக் கண்டு விலகி நிற்பார்கள். அல்லது மரணமடைவார்கள். வாதரோகத்தால் அவஸ்தைப்படுவார். அல்லது தீர்க்க ரோகத்தால் மருத்துவ செலவும் ஏற்படும். சுப கிரகத்தால் பார்க்கப்பட்டால் நன்மை உண்டு. நீதிமன்ற வழக்குகளில் வெற்றி பெறுவார்.

புதன், ஆறாம் இடத்தில் இருந்தால், இவரது திறமையால் அரசியல் தலைவர்களால் கௌரவிக்கப்படுவார். அதிகம் பேசுவார். படிப்பில் தடை உண்டு. 30 வயதிற்கு மேல் அரசியல் தலைவர்களால் ஆதரிக்கப்பட்டு பொறுப்பான பதவிக்கு வருவார். எழுதக்கூடியதில் வலிமை படைத்தவர். பாவக்கிரகத்துடன் சேர்ந்தால் உடலில் தோல் சம்பந்தமான வியாதி உண்டாகும். உறவினர்களுக்கு நன்மை செய்வார். குழப்பம் விளைவிப்பதில் கெட்டிக்காரராக இருப்பார்.

குரு பகவான் ஆறாம் இடத்தில் இருந்

## ஜோதிடக் களம்

தால் அநேக உறவினர்களை பெற்றவர்களாக இருப்பார். சரீரத்தில் அடிக்கடி காயங்கள் உண்டாகும். சுப கிரகம் பார்த்தால் தோஷம் இல்லை. இவருடன் நீச்ச, பாவ கிரகங்கள் சேர்ந்தால் அதிக மருத்துவ செலவுகள் ஏற்படும். உடல் சௌகரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார். நிதானமாக பேசிக்காரியத்தை சாதித்துக் கொள்வார்.

சுக்ர பகவான் ஆறாம் இடத்தில் இருந்தால் உபதேசம் செய்வதில் வல்லவராவார். இவரைச் சுற்றி ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். குழந்தைகளுக்காகவும் உறவினர்களுக்காகவும் அதிகம் செலவு செய்வார். இவர் கடும் முயற்சியினால் நன்மை செய்து, அதன் பின்னே அபவாதத்தை அடைவார்.

சனி பகவான் ஆறாம் இடத்தில் இருந்தால் விரோதிகளை ஜெயிப்பார். சனி பகவானுக்கு செவ்வாய் சம்பந்தம் கிடைத்தால் நிறைய இடங்களுக்கு சென்று வருவார். இராஜயோகம் குறைவாகவே கிட்டும். நன்மையும், தொல்லையும் கலந்தே காணப்படும். உணவு உண்பதில் பிரியம் உடையவர். எதிரிகளைக் கண்டு அச்சப்படக் கூடியவர். வாசனைத் திரவியங்களில் நாட்டம் உடைய வராக இருப்பார்.

இராகு பகவான் ஆறாம் இடத்தில் இருந்தால் தைரியமாக எல்லா சுகங்களையும் அடைவார். இராகுவுக்கு சந்திர சம்பந்தம் கிடைத்தால் உயர்ந்த பதவியில் உள்ள பெண்களால் உயர்வும், பாராட்டும் அடைவார். நீண்ட ஆயுளும் பெறுவார்.

கேது ஆறாம் இடத்தில் இருந்தால் தைரியமாக இருப்பார். சந்திரன், கேது சேர்ந்திருந்தால் பெண்களால் பாராட்டப்படுவார். எதிரிகளை வீழ்த்துவார். எந்த வித்தையையும் எளிதில் கற்றுக் கொள்வார். உறவினர்கள் மீது தீராத பாசம் கொள்வார்.

# சர்வதேச ரக்பி பேரவையினால் இலங்கையின் உறுப்புரிமை இரத்து

(கொழும்பு)

சர்வதேச ரக்பி பேரவை இலங்கையின் உறுப்புரிமையை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

இலங்கை ரக்பி கால்பந்தாட்ட ஒன்றியம் உரிய முறையில் தேர்தல்களை நடத்தி அதிகாரிகளை தெரிவு செய்யாத காரணத்தினால், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரக்பி பேரவையினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நியதிகளுக்கு அமைவாக தேர்தல் நடத்தப்படாமையினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இலங்கையின் உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டுள்ளது.

இலங்கை ரக்பி கால்பந்தாட்ட ஒன்றியத்தின் நடவடிக்கைகள் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டதன் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ரக்பி பேரவை அறிவித்துள்ளது.

இலங்கை ரக்பி கால்பந்தாட்ட ஒன்றியம் உரிய முறையில் ஆண்டு பொதுக் கூட்டங்களை நடத்தத் தவறியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஊழல் மோசடிகளினால் வருடாந்தம் 2.9 பில்லியன் ரூபா பணம் விரயம்

## தேசிய பிக்குகள் முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் ஊழல் மோசடிகளினால் வருடாந்தம் 2.9 பில்லியன் ரூபா பணம் விரயமாக்கப்படுவதாக தேசிய பிக்குகள் முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

2600 பௌத்த ஜயந்தி நிகழ்வுகளை முன்னிட்டு இலங்கையில் நல்லாட்சி ஏற்படுத்தப்பட வேண்டுமென முன்னணி வலியுறுத்தியுள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு இந்தப் பணத்தை பயன்படுத்த முடியும் என முன்னணியின் போஷகர் அத்தாகனே ரத்னபால தேரர் தெரிவித்துள்ளார். தர்ம நெறிகளின் அடிப்படையில் நாட்டை ஆட்சி செய்வதற்கு ஆட்சியாளர்கள் தவறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக வரலாற்றுக் காலங்களில் மன்னர்கள் ஆட்சி நடத்தியதனை நினைவில் நிறுத்திக் கொண்டு ஆட்சி நடத்த வேண்டுமென்றும் அவர் வலுயுறுத்தியுள்ளார்.

ஆட்சியாளர்கள் மக்களை கருணையாக நடத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)





கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தினால் சர்வதேச மகளிர் தினத்தின் நூற்றாண்டு நிறைவையொட்டி நேற்று மகளிர் பேரணி நடத்தப்பட்டது. இந்தப் பேரணி காலை 8.30 மணியளவில் குருநகர் கலாசார மண்டபத்திலிருந்து ஆரம்பமாகி கடற்கரை வீதி, மவுண்கார்மேல் வீதி, கடற்கரை வீதியூடாக ஆரம்பித்த இடத்தை வந்தடைந்தது. இதில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல மகளிர் அமைப்புக்களும் பங்கு பற்றின.

(படங்கள்:- எஸ். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொடர்புத் திறனை வளருங்கள்...

வளர்ந்து வரும் நாகரிகமான உலகில் உயரிய வேலைவாய்ப்புகளை பெற வேண்டுமானால் அதற்கு தகவல் தொடர்புத்திறன் மிக அவசியமான ஒன்றாகும். அதை வளர்க்க தேவையான முயற்சிகளில் நாம் இறங்கவேண்டும் தற்போது எண்ணற்ற பயிற்சி நிறுவனங்கள் செயல்படுகின்றன. இவற்றில் சில சிறப்பான பயிற்சியை தருகின்றன. பயிற்சி நிறுவனங்களில் முறையான பயிற்சி அளிக்கப்படுகிறதா? தகுதியான ஆசிரியர்கள் உள்ளனரா? முறையான கட்டணம் வசூலிக்கப்படுகிறதா? என அனைத்து காரணிகளையும் ஆராய்ந்து சேரவேண்டும்.

தகவல்தொடர்புத் திறன் என்பது பேசுவது, எழுதுவது உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டது.

"பேச்சால் வாழ்ந்தவனும் உள்ளான்; பேச்சால் கெட்டவனும் உள்ளான்" என்ற பழமொழிக்கு ஏற்றவாறு பேசுவது என்பது அவைகளில் முக்கியமான ஒன்றாகும். நாம் பேசுவதற்கு தேர்வு செய்யும் துறையில் பரந்த அறிவும், ஞானமும், அதிகமான நம்பிக்கையும், அளவுக்கு அதிகமான பயிற்சியும் இருந்தால் மட்டுமே சிறப்பாக பேசமுடியும்.

பேசும்போது எதையும் யோசிக்காமல் பேசக்கூடாது. எதைப்பேச வேண்டும் என்பதை நன்றாகத்திட்டமிட்டுக்கொண்டு பேச ஆரம்பிக்க வேண்டும். பேசும் மொழிநடையானது எவ்வளவு முக்கியமோ அதைப்போலவே முக்கியமானது உபயோகப்படுத்தும் வார்த்தைகள். நேர்மறையான வார்த்தைகள் நமது நடையில் சரளமாக வரவேண்டும். சர்ச்சைக்குரியவை பற்றிப்பேசுவதை எப்போதுமே தவிர்த்து விட வேண்டும். எதைப்பேச வேண்டுமோ அதில் தெளிவான கருத்துக்களும் எளிமையான நடையும் துல்லியமான விடயங்களும் இடம்பெற வேண்டும்.

நாம்பேசுவதை மற்றவர்கள் கேட்க வேண்டும் என்ற எண்ணம் எழுவது போல் நாமும் மற்றவர்கள் பேச்சை கவனிக்கவேண்டும். உங்கள் மொழி நடையில் கடுமையான வார்த்தைகள் பயன்படுத்துவதைத் தவிருங்கள். மற்றவர்களின் கண்களைப்பார்த்து பேசுங்கள் அது உங்களின் தன்நம்பிக்கையை பிரதிபலிக்கும் செயலாகும். மேற்கூறிய வழிமுறைகளை முறையாக பின்பற்றினால் உங்களுடைய தகவல் தொடர்புத்திறன் மேம்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

# IELTS இன்றி SPOT ADMISSION மூலம் UK இல் உயர் கல்வியினை வழங்கும் FLEX INSTITUTE

இன்றைய மாணவர்கள் உயர்கல்வியை தொடங்குவதற்காக UK மற்றும் வெளிநாடுகளில் சென்று கல்விகற்பதற்கு அதிக ஆர்வம் கொண்டுள்ளார்கள். இந்த வகையில் பல வருட அனுபவம், சேவை மனப்பான்மையோடும் இன்றைய மாணவர்களின் பெற்றோர்களின் பொருளாதாரத்தினையும் கருத்திற் கொண்டு அனுபவம் கொண்ட வழிகாட்டிகளின் துணையோடு மாணவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து Flexinstitute தமது சேவையில் திருப்தியடைகிறார்கள். அத்தோடு மட்டுமன்றி வெளிநாட்டில் உயர்கல்வி செல்லும் மாணவர்களின் விமான பயணரிக்கெட்டினையும் இலவசமாக வழங்குவதில் பெருமையடைகிறார்கள். என Flexinstitute நிறுவனத்தின் இயக்குநர் ஜெகன் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெற்றோர் தமது பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி அவர்களின் உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்கின்றனர். இதனை சாதகமாக்கி பல போலிநிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக மாணவர்கள் சரியான ஓர் இடத்தை நாடாமல் ஒழுங்கான தகவல்களையும் ஆலோசனைகளையும் மற்றும் சேவைகளை பெறமுடியாமல் பணரீதியாகவும், மனஉளரீதியாகவும் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றதை காணக்கூடியதாக இருக்கின்றது. அத்தோடு, வெளிநாடு சென்றாலும் மாணவர்கள் தங்குமிட வசதிகள் சரியாக கிடைக்கப்பெறாமல் பல அசௌகரியங்களையும் சந்திக்க நேரிடுகின்றது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் மாணவர்களின் நன்மைகருதி Flex Institute ஆனது முற்றிலும் இலவசமான சேவையை வழங்கி தலைநகரில் தலைநிமிர்ந்து நிற்கிறது. அத்துடன் சர்வதேச பல்கலைக் கழகங்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு மாணவர்களுக்கு கல்வி தொடர்பான தகவல்களை சரியானதாகவும் முறையானதாகவும் உண்மையுள்ளதுமான ஆவணங்களுடன் உறுதிப்படுத்திக்கொடுக்கின்றது. எமது நிறுவனத்தை நாடும் மாணவர்களுக்கு Visa கிடைக்கும் முன்போ அல்லது Visa கிடைத்த பின்போ எதுவித கட்டணமும் அறவிடாமல் இலவச சேவையையே எமது நிறுவனம் தொடர்ந்து ஆற்றிவருகிறது. இதற்கு சான்று எங்கள் விளம்பரங்களோ அல்லது சுவரொட்டிகளோ அல்ல. எமது சேவையின் மூலம் பூரண பயனைப் பெற்ற மாணவர்களும் அவர்களது பெற்றோருமே சான்றாகும்.

அந்த வகையில் மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் விரும்பிய பாடநெறிகளை குறித்த கல்வி நிறுவனங்களில் தொடரக்கூடியதாக மிகக் குறுகிய காலத்தில் அனுமதிகள் (offer letter within 2days) பயண ஏற்பாடுகள் என்பவற்றை செய்து கொடுப்பதில் Flex அரும்பணியாற்றிவருகிறது.

மாணவர்களின் விருப்புக்கேற்ப உயர்கல்விக்கான துறையினை இனங்கண்டு குறிப்பிட்ட நாடுகளில் பிரபல கல்வி நிறுவனங்களில் அனுமதியினைப் பெற்றுக்கொடுப்பதிலும் அதற்கான விசா ஒழுங்குகள், பத்திரங்கள் தயாரித்தல் என்பவற்றை மிகத்துரிதகதியில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்கிறது.

மாணவர்கள் விசா அனுமதிக்காக தமது சொந்தவங்கிக்கணக்கில் அல்லது பெற்றோரின் கணக்கில் ஆகக் குறைந்தது 28 நாட்கள் நிதியிருப்பு (28 days Bank Balance) இருப்பின் போதுமானது. IELTS இன்று க.பொ.த சாதாரணதரத்துடன் அனுமதியைப் பெறமுடியும்.

# BCS கற்கை நெறியை யாழில் வழங்கும் IIS

தனது 15 ஆண்டுகால வரலாறு முழுவதிலுமே குடாநாட்டின் உயர்கல்வி தொடர்பான எண்ணங்களை உருவாக்குவதிலும் உயர்கல்வி அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்துவதிலும் IIS ஒரு முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளது. என அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி கு.விக்னேஸ் தெரிவித்தார். அவர்மேலும் கூறுகையில்,

அவ்வாறான ஒன்றை உருவாக்க உங்கள் அறிவு வளங்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்றும் கூறினார்.

உலகின் மிகப்பெரும் நிறுவனங்கள் பலவும் மிக எளிமையாகவே தொடங்கப்பட்டன. எடுத்துக்காட்டாக GoogleSearch Engine ஆனது 1996 இல் ஸ்ரன்ஃபோட் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவர்களான லறிபேஜ் மற்றும் செர்கே பிறின் ஆகிய இருவராலும் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்த ஒரு அறையில் தொடக்கப்பட்டு படிப்படியான வளர்ச்சியின் பின் உலகின் மிகச்சக்தி வாய்ந்த வியாபாரக் குறிகளில் ஒன்றாக ஆனது. அவ்வளர்ச்சிக்கு தேவைப்பட்டதெல்லாம் பிரகாசமான மனங்களும் பெருங்கனவுகளுமே. எந்த ஒரு தேசத்தின் எதிர்காலமும் அதன் மக்கள் எந்த அளவிற்கு உருவாக்கல் மற்றும் புதுமை புகுத்தல் திறன் வாய்ந்தோராய் உளர் என்பதிலேயே தங்கியுள்ளது.

இலங்கை ஒரு இளம் தேசம் அதாவது அதன் சனத்தொகையில் 68 வீதத்தினர் 40 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களாகவும், 19 வீதத்தினர் 15-24 வயதெல்லைக்கு இடைப்பட்டவராயும் உளர். இளைஞர்களுக்குத்தான் புதிதாக கண்டு பிடிக்கும் ஆர்வமும் சக்தியும் உண்டு. இளைஞர்கள் தான் வழிகாட்டிகள், தமது தேசத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான வாய்ப்பினை அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். ஏன் என்றால் அவர்கள்தானே பெரும்பான்மையினர். என் முன்னுள்ள இளைஞர்களும் யுவதிகளும் நாட்டின் சிறந்த பிரஜைகளில் அடங்குவர். ஒருதேசம் என்கின்ற முறையிலே நாம் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களை சமாளிக்க வல்ல திறன்களையும் தாம் பெற்றிருப்பதை அவர்கள் நிருபித்துள்ளார்கள்.

மேலும் சொந்தத் தொழில்களை நிறுவுவதற்கான திறமைகொண்டவர்கள் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கு ஊக்கிவிக்கப்படவேண்டும். இதன்மூலம் அவர்கள் தொழில் செய்வோராயின்றி தொழில் தருனராகவும் தொழில் வாய்ப்புக்களை ஊக்குவிப்போராயும் ஆகின்றனர். நீங்கள் ஒரு சிறுகடையினைக் கூட தொடங்கமுடியும். ஏதாவது செய்யுங்கள். சமூகமும் பெற்றோரும் உங்கள் மீது நிறையவே முதலீடு செய்துள்ளார்கள். எனவே அம்முதலீடுகளை வீண்போக விட்டீர்களானால் அது உங்கள் பொறுப்பற்ற போக்காகி விடும்.

IIS City Camps ஐ பொறுத்தவரை நாம் அறிமுகப்படுத்துகின்ற ஒவ்வொரு பாடநெறியும் அவர்கள் தம் தொழிலினைப் பெற்றுக்கொள்வதிலோ அல்லது மேற்படிப்பினை தொடர்வதிலோ உதவுவதாகவே உள்ளது. சமூகத்தில் பொறுப்புள்ள ஒரு நிறுவனம் என்கின்ற முறையிலே எமது ஒவ்வொரு பயிற்சி நெறியும் நுணுக்கமாக ஆராயப்பட்டு எமது சமூகத்திற்கு ஏற்றவாறும் உலகின் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்யக்கூடியதாயும் உயர்தரத்தில் வடிவமைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படுகின்றது.

ஒரு குறிப்பிடக்கூடிய அம்சம் என்னவெனில் எமது நிறுவனத்தில் BCS பாடநெறிகளை நாம் அறிமுகம் செய்துள்ளோம். எமது நிறுவனத்தில் HND யினை நிறைவு செய்த மாணவர்களுக்கு அது ஒரு வரப்பிரசாதமாக அமையும். கடந்த காலத்தில் எமது நிறுவனத்தில் HND ஐ பூர்த்தி செய்து கொள்ளும் மாணவர்கள் தமது இறுதியாண்டுப்பயிற்சி நெறியினை தாம் விரும்பும் பல்கலைக்கழகத்தில் தொடர்வதில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. குறிப்பாக பெருமளவு நிதி தேவைப்பட்டது. இறுதியாண்டு கற்கை நெறியினை இலங்கையில் தொடர்வதானால் அவர்கள் கொழும்பிற்குச் சென்று உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்கப்பால் ஆறிலிருந்து ஏழு இலட்சம் ரூபாய் வரை பல்கலைக்கழக கட்டணமாக செலவிட வேண்டியிருந்தது. அதே போன்று அவர்கள்தம் இறுதியாண்டுக்கற்கை நெறியினை ஐக்கிய இராட்சியத்தில் தொடர்வதாயின் உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்கப்பால் 9000 ஸ்ரேலிங் பவுண்ஸ் வரை செலவு அவர்களுக்கு ஏற்பட்டது.

எம்மைப் பொறுத்த வரையில் அந்த இறுதியாண்டுக் கற்கை நெறிகளை யாழ் குடாநாட்டில் நடத்துவதற்கு ஏதாவது ஏற்பாடுசெய்ய முடியுமா என்பதற்குப் பல தடவைகள் நாம் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களுடன் பேச்சு வார்த்தைக்கு முயன்றோம். எனினும் அது கைகூடாமையால் நாம் ஏமாற்றமடைந்தோம். இவ்விடயம் பற்றி பிரித்தானியாவில் உள்ள முன்னணிப் பல்கலைக்கழகங்களுடன் பேச்சுக்கள் நடத்தினோம். அவர்களுக்கான உரிமைக் கட்டணத்திற்கான தேவைகள் மற்றும் இப் பயிற்சி நெறிக்கான குறைந்த பட்ச மாணவர்களின் தொகை போன்ற விடயங்களை எம்மால் நிறைவு செய்ய முடியவில்லை. எனவே இந்த முன்மொழிவை கைவிட நேரிட்டது.

இந்நிலையில் BCS நெறிகளை இங்கு நடத்துவதற்கான எமது தளர்வில்லாத முயற்சிகள் ஒரு பெரும் வெற்றியளித்துள்ளது. அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளோம்.

மேலும் BCS கற்கை நெறியானது மூன்றுகட்டங்களினால் ஆனது. சான்றிதழ், டிப்ளோமா, தொழில்சார்பட்ட டிப்ளோமா ஆகும். BCS இன் முழுமையான தராதரம் B.Sc in IT/Computing க்கு நிகரானது. உலகின் பல முன்னணிப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுக்கள் இத்தகைமையை ஏற்று அங்கீகரித்துள்ளன.

தற்போது ஒரு இலட்சம் ரூபாய்க்கும் குறைவான செலவுடன் எமது HND மாணவர்கள் BCS இன் இறுதிக்கட்டத்தை கற்பதற்கான ஏற்பாடுகளைநாம் செய்துள்ளோம். யாழ் குடாநாட்டு மாணவர்கள் தமது பட்டப்படிப்பினை இங்கேயே பூர்த்தி செய்வதற்கான ஒரு சிறப்பான வாய்ப்பினை நாம் ஏற்படுத்தியுள்ளோம் எனவும் கூறினார்.

எமது மாணவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். சிறப்பாக முன்னேறியுள்ளார்கள். IIS இன் நல்ல படிமத்தை வெளி உலகிற்கு வளர்க்கும் முதன்மையான தூதர்கள் அவர்களே. அவர்களுக்கு நன்றி. IIS தன் பெயரை பலமாக பதித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவின் ஆசனத்தை பாதுகாக்கவே பதவி ஏற்றேன்

## ஜயந்த கெட்டகொட தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகத் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவின் ஆசனத்தை பாதுகாக்கும் நோக்கில் அவரது வெற்றிடத்திற்கான பதவியை ஏற்றுக்கொள்வதாக ஜெயந்த கெட்டகொட தெரிவித்துள்ளார்.

ஜெயந்த கெட்டகொட நேற்று நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

சிறையில் அடைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனநாயகத் தேசியக்கூட்டமைப்புத் தலைவர்கள் கோரிக்கை விடுத்ததாகவும் சரத்பொன்சேகாவின் நாடாளுமன்ற ஆசனத்தை வேறு எவரும் தட்டிப்பறிப்பதனை தடுத்து நிறுத்தும் நோக்கில் தாம் இந்த நடவடிக்கையை எடுக்க முற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சன் சி கப்பலில் சென்ற மேலுமொருவர் விடுதலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய என குற்றம் சுமத்தப்பட்டிருந்த சன் சி கப்பலில் சென்ற இலங்கை அகதி ஒருவரை நேற்று முன்தினம் கனேடிய நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

இதனை அடுத்து அவர் நேற்று முன்தினம் தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இதே குற்றச்சாட்டின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் 31 சன் சீ கப்பல் அகதிகளின் வழக்கு தொடர்பில் எவ்வாறான தீர்ப்பு வழங்கப்படும் என்பதை கனேடிய எல்லை பாதுகாப்பு சபையினர் எதிர்பார்த்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்தில் வாகனம் திருத்தும் பணியில் இருந்த அவர் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே விடுதலைப்புலிகளின் தொடர்பை பேணியதாக குறித்த அகதியின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் வாதாடி இருந்தார்.

இதனையடுத்தே நீதிமன்றம் அவரை விடுவிப்பதாக உத்தரவிட்டது. இந்த நிலையில் இதேகுற்றச்சாட்டின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய அகதிகளின் வழக்கு தொடர்பிலும் இதே வாதத்தினை முன் வைக்க அவர்களின் சட்டத்தரணிகள் தீர்மானித்துள்ளனர்.

நிர்ப்பந்த அடிப்படையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளமையால் அவர்களை புலிகளாக கருத முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளிக்கலாம் என சட்டத்தரணிகள் எதிர்பார்த்துள்ளனர். (ஸ்ரீ-2)

# ஜே.வி.பி.அலுவலகத்தை தாக்க முயன்ற ஆளுங்கட்சி குண்டர்கள் மடக்கிப்பிடிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி கட்சியின் பிரசார அலுவலகமொன்றைத் தாக்கிச் சேதப்படுத்த முயன்ற ஆளுங்கட்சியின் கோஷ்டியொன்று பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு பத்தரை மணியளவில் குருநாகல் மாவட்டத்தின் ரிதீகம பிரதேசத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

அப்பிரதேசத்தில் அமைந்திருந்த ஜே.வி.பி. கட்சியின் அலுவலகத்தைத் தாக்கிச் சேதப்படுத்த ஆளுங்கட்சியின் மாகாண சபை உறுப்பினர் ஒருவரால் அனுப்பப்பட்டிருந்த நான்கு குண்டர்கள் பிரதேசவாசிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு வந்திருந்த கோஷ்டியினர் ஆயுதங்களை வைத்திருந்ததுடன் ஜே.வி.பி. யின் அலுவலகத்தை தீக்கிரையாக்கத் தேவையான எரிபொருள் உள்ளிட்ட பிற சாதனங்களும் வைத்திருந்தாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அவர்கள் அப் பிரதேச ஜே. வி. பி. அபேட்சகர் ஒருவரின் தலையில் போத்தலால் தாக்கியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதன் பின் ஒன்று திரண்ட பொதுமக்கள் கோஷ்டியினரைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இதற்கு முன்பும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஜே.வி.பி. ஆதரவாளர்களைத் தாக்க முயன்ற ஆளுங்கட்சிக் கோஷ்டி மீது அங்கிருந்த கிராமவாசிகள் தாக்குதல் நடாத்தி விரட்டியடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# போலிக் கடவுச் சீட்டின் மூலம் இலங்கை வரமுயன்றோர் கைது

திருச்சி விமான நிலையத்திலிருந்து போலிக் கடவுச்சீட்டின் மூலம் இலங்கை வர முற்பட்ட மூவர் அந்நாட்டு பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் திருச்சியில் இவர்கள் கடந்த 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த மூவரின் கடவுச் சீட்டு முத்திரை பொறிக்கும் பகுதியில் இந்திய நாட்டிற்கான போலி முத்திரை பதிக்கப்பட்டிருந்ததை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் இலங்கையைச் சேர்ந்த இருவரும் இந்தியர் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இஹன்டி கண்டியைச்சேர்ந்த முகமது இன்சாஜ் வயது 55 மாத்தளையைச் சேர்ந்த ஜாசீக்தீன் வயது 26 மற்றும் சென்னையைச் சேர்ந்த ஷேக்பரீத் வயது 52 ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களுக்கான விசாரணைகளை தமிழ் நாட்டுக் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# தென்கொரியாவில் 15 ஆயிரம் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு

தென்கொரியாவில் 15 ஆயிரம் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

தென்கொரிய அரசாங்கம் இதற்கான இணக்கத்தை தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த தென்கொரிய வர்த்தக பிரதி அமைச்சருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து இதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து வருடாந்தம் 5 ஆயிரம் பேர் வரை தென்கொரியாவுக்கு வேலைக்காக செல்கின்றனர்.

புதிய இணக்கப்பாட்டுக்கு ஏற்ப வருடாந்தம் 15 ஆயிரம் பேர் குறித்த நாட்டிற்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கலை,கலாசார நிகழ்வுகளுடன் சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம்

வடமாகாண கல்வி பண்பாட்டுத்துறை விளையாட்டு அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் யாழ். மாநகராட்சி மன்றமும் இணைந்து நடத்திய மகளிர் தின நிகழ்வுகள் நேற்று யாழ் . வீரசிங்க மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றன.

இந் நிகழ்வுக்கு தலைமை தாங்கிய யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குனராசா உரையாற்றுகையில்,

பெண்களின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற அடிமைத்தனத்திற்கு எதிராகவே இந்த மகளிர் தினம் கொண்டாடப்படுகின்றது.

வரலாற்று ரீதியாக நோக்கும் போது பெண்கள் சமுதாயத்தில் முக்கிய பங்காற்றியுள்ளதுடன் தலைமைப் பதவிகள் வகித்திருந்தனர் என்பது புலனாகிறது.

19, 20ஆம் நூற்றாண்டுகளில் பெண் அடிமைத்தனத்திற்கு எதிராக பல கிளர்ச்சிகள் எழுந்தன. இதன் மூலம் தான் பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் வெளிக்கொணரப்பட்டன.

குறிப்பாக 1911ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினம் முதன் முதலாக கொண்டாடப்பட்டது. இந்தக் காலப்பகுதியிலிருந்து பெண்களின் உரிமைகள் தொடர்பாக போராடுவதற்கு என பல அமைப்புகள் உருவாக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டுத்துறை விளையாட்டு அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், கலாநிதி எஸ்.திருநாவுக்கரசு, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் என். இளங்கோ, கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் க. கணபதிப்பிள்ளை எனப் பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஸ்ரீ-2-6)

# அரசியல்துறையில் பெண்களின் பங்களிப்பு மிகக்குறைவானதே

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏனைய துறைகளில் பெண்களின் பங்களிப்பு கூடுதலாக இருந்த போதிலும் அரசியலில் அவர்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே உள்ளது என பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது . உலக மகளிர் தினமன்று பெண்களுக்கு சம உரிமை வழங்கப்படவேண்டும் என்று பரவலாக கூறப்பட்டு வருகிறது. இவ்விடயத்தில் இலங்கை பெண்கள் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர் என்றுதான் நினைக்கிறேன். உலகின் முதலாவது பெண் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவானமை இவ்விடயத்தில் இலங்கை பெண்களை மிகவும் உயர்ந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளமை இலங்கைக்கு பெருமை தரும் விடயமாகும்.

இலங்கையில் உள்ள மொத்த வாக்காளர்களில் 52 சத வீதத்தினர் பெண்களாவர். அதேவேளை சட்டத்துறையில் 40 சதவீதமாகவும் பல்கலைக்கழக மாணவர்களில் 69 சதவீதமாகவும் நிர்வாக சேவையில் 35 சத வீதமாகவும் மருத்துவத்துறையில் 43 சத வீதமாகவும் கல்வித்துறையில் 70 சத வீதமாகவும் பெண்கள் உள்ளனர். எனினும் அரசியல் துறையில் பெண்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது என அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை**

**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்**

**இதழியல் டிப்ளோமா கற்கைநெறி**

**ஆய்வு மற்றும் உள்ளகப் பயிற்சி அறிக்கை**


ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் முழுநேர (2009/2010) மற்றும் பகுதிநேர (2007/2009) பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்கள் தங்கள் ஆய்வுத்திட்டத்தையும்(Research Project) உள்ளகப் பயிற்சி அறிக்கையையும் 30.03.2011ஆம் திகதிக்கு முன்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரீட்சைகள் கிளையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்
08.03.2011

(சி-2860)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவில் நிலைமையை நேரில் கண்டறிய ஐ.நா. மனிதாபிமான குழு டிரிபோலி விரைகிறது



லிபியாவில் அந்நாட்டு தலைவர் கேணல் கடாபியின் ஆதரவாளர்களுக்கும் அரசாங்க எதிர்ப்பு போராட்டக்காரர்களுக்குமிடையே உக்கிர மோதல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அந்நாடு பாரிய மனிதாபிமான நெருக்கடியொன்றை எதிர்கொண்டுள்ளது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை, லிபியாவுக்கு மனிதாபிமான குழுவொன்றை அனுப்புவதற்காக அந்நாட்டுக்கான புதிய தூதுவர் ஒருவரை நியமித்துள்ளது.

முன்னாள் ஜோர்தானிய வெளிநாட்டு அமைச்சர் அபடேலியாஹ் அல்- காடிப்பை புதிய லிபியத் தூதுவராக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் பெயர் குறிப்பிட்டுள்ளார்.

லிபிய தலைவர் கடாபி, தலைநகர் டிரிபோலிக்கு ஐக்கிய நாடுகள் சபை மதிப்பீட்டுக் குழுவொன்று விஜயம் செய்ய அனுமதிப்பதற்கு இணங்கியுள்ளதாக பான் கீ மூன் கூறினார்.

லிபியாவின் மிஸ்ரடா நகரில் உக்கிர மோதல்கள் நடைபெறுகின்ற நிலையில் அந்நகரை சென்றடைவதை சாத்தியமாக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட மனிதாபிமான அதிகாரியொருவர் கோரியுள்ளார்.

அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களைப் பின்வாங்கிச் செல்ல வைக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ள கடாபியின் ஆதரவுப் படையினர் டிரிபோலி நகருக்கு அருகிலும் அந்நாட்டின் கிழக்கு பகுதியிலும் மீளவும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாய கம் பான் கீ மூனின் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் லிபியாவில் பொது மக்களுக்கு எதிராக முறையற்ற வித்த் தில் அரசாங்கம் படையினரை பயன் படுத்துவதையும் பொதுமக்களின் இலக்குகள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்துவதையும் உடனடி யாக நிறுத்த வேண்டுமென வலியுறுத்தப் பட்டுள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறுபவர்கள் அல்லது பாரிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் அவற்றுக்கு பொறுப்புக் கூறியே ஆகவேண்டும் என பான் கீ மூன் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

லிபிய தலைநகர் டிரிபோலிக்கு மனிதாபிமான மதிப்பீட்டு குழுவொன்று வருவதற்கு லிபிய வெளிநாட்டு அமைச்சர் முஸா குஸா இணக்கம் தெரிவித்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டிரிபோலி நகரின் கிழக்கே 200 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மிஸ்ரடாவில் இடம்பெற்று வரும் உக்கிர மோதல்களையடுத்து பலர் படுகாயமடைந்த நிலையில் உயிருக்காக போராடி வருவதாகவும் அங்கு உடனடியாக உதவி தேவைப்படுவதாகவும் ஐக்கிய நாடுகள் நிவாரண ஒருங்கிணைப்பாளர் வலெறி அமொஸ் தெரிவித்தார்.

மிஸ்ரடாவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது படையினர் பீரங்கிகள், ஏறிகணைகள் என்பனவற்றை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதல்களில் உயிரிழந்த 21 பேரின் சடலங்களும் 100இற்கும் மேற்பட்ட காயமடைந்தவர்களும் தமது மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டதாக உள்ளூர் மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

அதேசமயம் தமது மருத்துவமனையை இலக்கு வைத்தும் அரசாங்கப் படையினர் தாக்குதல் நடத்தியதாக அவர் கூறினார். (ஸ்ரீ)




# பொதுமக்கள் மீதான தாக்குதல் தொடருமானால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும்

## கடாபிக்கு ஒபாமா எச்சரிக்கை

லிபியாவில் போராட்டக்காரர்கள் வசம் இருக்கும் நகரங்களை மீண்டும் தன்வசப் படுத்துவதில் கடாபி அரசு தீவிரமாகவுள்ளது. எனவே, அவரது ஆதரவு இராணுவத்தினர், போராட்டக்காரர்கள் வசம் இருக்கும் மத்திய தரைக் கடல் பகுதியில் உள்ள எண்ணெய் வளம் மிக்க துறைமுகம் நகரமான ராஸ் லனூப் மீது கடும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் அந்நகரின் மீது பறந்து இராணுவத்தின் போர் விமானங்கள் சரமாரியாக குண்டுவீசி தாக்கின. பதிலுக்கு போராட்டக்காரர்களின் புரட்சிப்படையும் தாக்குதல் நடத்தியது. இதனால் இரு பிரிவினருக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இராணுவம் குண்டு வீசியதில் 2 குழந்தைகள் பலியாகினர். இதற்கிடையே தலைநகர் டிரிபோலியை நோக்கி புரட்சிப்படை முன்னேறி வருகிறது.

இதனால் இரு தரப்பினருக்கும் இடையே சண்டை வலுவடைந்துள்ளது. போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது கடாபியின் இராணுவம் கொடூர தாக்குதல்களை நடத்தி வருவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். கடாபியின் ஆதரவு அதிகாரிகள் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.



இது மிகவும் வருந்தத்தக்கது என்று தெரி வித்துள்ளார். புருசெல்ஸ் நகரில் பன்னாட்டு இராணுவத்தின் கூட்டம் நடந்தது. அதில் லிபியாவில் தற்போது நடைபெற்று வரும் வன் முறை சம்பவங்கள் குறித்து விவாதிக்கப் பட்டது. அப்போது லிபியாவில் அமைதியை ஏற்படுத்த இராணுவம் நடவடிக்கை மேற்கொ ள்வது என்று முடிபு செய்யப்பட்டது.

மேலும் கலவரத்தால் பாதிக்கப்பட்ட லிபிய மக்களுக்கு மேலும் ரூ.68 கோடி வழங்கவும் அமெரிக்கா முடிபு செய்துள்ளது. இந்தத் தகவலை ஒபாமா தெரிவித்ததாக அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது. இதற்கிடையே கடாபியின் இராணுவத்துக்கு எதிராக போராடும் புரட்சி படைக்கு ஆயுத உதவி அளிக்க அமெரிக்கா முடிபு செய்துள்ளது. விமானங்கள் மூலம் ஆயுதங் கள் மற்றும் கொமாண்டோக்களை அனுப்ப வும் ஏற்பாடு செய்து வருகிறது.

கடந்த 2001 ஆம் ஆண்டு தலிபான்களிடம் இருந்து ஆப்கானிஸ்தானை மீட்க இது போன்ற நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டது. அதே முறை லிபியாவிலும் கடைப்பிடிக்கப்படவுள்ளது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. இதற்கிடையே பெங்காசியில் போராடும் புரட்சி படைக்கு சவுதி அரேபியாவை ஆயுதம் வழங்கும்படி அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கு சவுதி அரேபிய மன்னர் மறுத்து விட்டதாக தெரிகிறது. இருந்தும் அவருடன் அமெரிக்கா தொடர்ந்து பேசி வருகிறது. (ஸ்ரீ)

# தெற்கு சூடானில் இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் மோதல்

## 40 பேர் பலியாகினர்

ஆபிரிக்க நாடான தெற்கு சூடானில் சூடான் மக்கள் விடுதலைப்படையினருக்கும் அலோனியன் தலைமையிலான தீவிரவாதிகளுக்கம் இடையே மோதல் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் இரவு நையில் மாகாணத்தில் மலர்க்கல் என்ற இடத்தில் சூடான் மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த வீரர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றும் ஒருவர் காயமடைந்தார்.


இதைத்தொடர்ந்து அன்று நள்ளிரவு 12 மணியளவில் தீவிர வாதிகளின் முகாமுக்குள் சூடான் மக்கள் விடுதலை முன்னணிப் படையினர் தாக்குதல் நடத்தினார்கள். அதில் தீவிரவாதிகள் தரப்பில் 34 பேரும் சூடான் மக்கள் விடுதலைப் படைவீரர்கள் 6 பேரும் கொல்லப்பட்டனர்.

மேலும் 28 இராணுவ வீரர்கள் காயமடைந்தனர். தீவிரவாதிகளிடம் இருந்து 38 ஏ.கே 47 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டது. இவை வடக்கு சூடான் இராணுவத்தின



ரால் தீவிரவாதிகளுக்கு வழங்கப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆனால் அதை அந்நாட்டு இராணுவம் மறுத்துள்ளது.

மக்கள் விருப்பப்படி சூடானின் தென் பகுதி விடுதலைபெற்று தெற்கு சூடான் ஆக உருவாகவுள்ளது. அதற்கான வாக்கெடுப்பு சமீபத்தில் நடந்தது. தெற்கு சூடான் தனி நாடாக விரைவில் அறிவிக்கப்படவுள்ளது. எனவே, அங்கு குழப்பத்தை ஏற்படுத்த வடக்கு சூடான் முயற்சி செய்வதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. (ஸ்ரீ-2)



ஏமனில் ஜனாதிபதி அப்துல்லா சலே பதவிக் விலகக் கோரி தலைநகர் சனாவில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. கடந்த 22 நாட்களாக நடந்து வரும் ஆர்ப்பாட்டத்தில் பலர் பலியாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று யோசியுங்கள்.
நாளைக்குப் பேசலாம்.
- ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஆயுத கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்

யுத்தம் முடிந்துவிட்டது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது என்பது நாடு அமைதியாக-அச்சமற்றதாக உள்ளதென்பதன் அடிப்படையில் கூறப்படுவதாகும்.

இருந்தும் நாட்டின் அமைதிநிலை என்பது இன்னமும் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய நிலையில் இருப்பதனை உணர முடிகின்றது.

குறிப்பாக தமிழர்களின் பாதுகாப்பு விடயத்தில் ஆயுத கலாசாரம் இன்னமும் அச்சம் தரும் விடயமாக இருப்பதனைப் பல சம்பவங்கள் உறுதி செய்துள்ளன.

நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சென்ற வாகனத்தின் மீது கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டுள்ளதுடன் துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மீது நடத்தப்பட்ட இத் தாக்குதல் சம்பவமானது ஜனநாயகத்தின் ஸ்திரத்தன்மைக்குப் பாதகமானதென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

அநுராதபுரம் நொச்சியாகமவில் வைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தை அச்சுறுத்தல் அல்லது எச்சரிக்கை செய்தல் என்ற கோதாவில் மட்டும் நோக்கமுடியாது.

மாறாக இச் சம்பவமானது இலங்கையில் தமிழ் மக்கள் ஜனநாயகப் பாதையில் செல்வது கூட முடியாத காரியம் என்ற உணர்வை தமிழ்ச் சமூகத்திடம் ஏற்படுத்தி விடக்கூடியது.

எனவே இது விடயத்தில் அரசு பக்கசார்பற்ற விசாரணைகளை மேற்கொள்வது தமிழ் மக்கள், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொள்வதற்கு உறுதுணையாக இருக்கும்.

அதேநேரம் பக்கசார்பற்ற விசாரணை என்பது எங்களைப் பொறுத்தவரை அரசியல்வாதிகள் விடுகின்ற அறிக்கையில் விலத்தமுடியாத சொற்பதமாக இருந்து வருவதும் தெரிந்ததே.

பக்கசார்பற்ற விசாரணை வேண்டும் எனக் கோரிக்கை விடுவதுடன் அந்த விடயம் முடிபுக்கு வந்துவிடும்.

அந்தக் கலாசாரத்திற்குள் இந்த பக்கசார்பற்ற விசாரணையும் அடங்காமல் நேர்மைத் தனத்துடன் விசாரணை இடம்பெறவேண்டும். அப்போதுதான் நாட்டில் நிரந்தர அமைதி நிலையை ஏற்படுத்த முடியும்.

அதேநேரம் தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் ஒவ்வொருவரும் தமக்குச் சாதகமாக திசைதிருப்புவதைத் தவிர்ப்பது உண்மை வெளிவருவதற்கு உதவுவதாக அமையும்.

# சிறிதரன் எம்.பி.மீது தாக்குதல்
## சர்வதேச விசாரணையைக் கோருகிறது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

(நியூயோர்க்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மீதான தாக்குதலுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல் சம்பவம் குறித்து அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என நாடு கடந்த அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமார் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும், அவரது உதவியாளர்களும் பயணம் செய்த வாகனம் மீது அநுராதபுரம் நொச்சியாகம பகுதியில் வைத்து கைக்குண்டுகள் வீசியும், துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் திங்கட்கிழமை அன்று நடத்தப்பட்ட தாக்குதலை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வன்மையாகக் கண்டனம் செய்கிறது.

இத் தாக்குதலில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் அவரது உதவியாளர்களும் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளதாக அறியவருகின்றது. தாக்குதல் நடத்தப்பட்ட இடம், விதம் போன்றவை இவர்களைக் கொலைசெய்யும் நோக்குடனேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பதனை வெளிப்படுத்துகிறது. தாக்குதல் நடத்தியவர்களின் இலக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனாகவே இருந்திருக்கிறது.

அரசின் உயர் பீடத்தின் திட்டத்தின் அடிப்படையிலேயே தாக்குதல் நடத்தியோர் இயங்கியிருக்க வேண்டும். இத்தகைய சந்தேகங்கள் எழுவதற்கு வலுவான காரணங்கள் உண்டு.

இத்தகைய சம்பவங்கள் மூலம் தமிழ் மக்களை அச்சுறுத்தி அடக்கி ஒடுக்கி விடலாம் என்று அரசு தொடர்ந்தும் எண்ணுகிறது என்பதனைத்தான் நாம் இச் சம்பவத்தின் ஊடாக உணரமுடிகின்றது. அண்மையில் தேசியத் தலைவரின் தாயார் பார்வதி அன்னையின் அஸ்தி சிதைக்கப்பட்ட சம்பவத்தினைத் தொடர்ந்து இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருப்பது ஆட்சியாளர்களின் நோக்கத்தை தெளிவுபடுத்துகிறது.

அரசு மீதான யுத்தக் குற்றம் மற்றும் தமிழர் மீதான இனப்படுகொலை போன்றவை குறித்து அனைத்துலக விசாரணைகள் தேவை என்ற குரல்கள் மேலெழுந்துவரும் ஒரு சூழலில்தான் மக்கள் பிரதிநிதி ஒருவர் மீதான கொலை முயற்சியும் நடைபெற்றிருக்கிறது.

அரசே இக் குற்றச் செயலுக்குப் பின்னணியில் இருந்திருப்பதாக நாம் கருதுவதால் இச்சம்பவமும் அனைத்துலக விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும் என அனைத்துலக சமூகத்தினைக் கோருகிறோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# ஐந்து ஆண்டுகளின் பின்னர் சிவராம் படுகொலை வழக்கு

(கொழும்பு)

மூத்த தமிழ் ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் படுகொலை தொடர்பான வழக்கை விசாரணைக்கு எடுப்பதற்கு நீதிமன்றம் முடிபெடுத்துள்ளதாக அறிய வந்துள்ளது. எதிர்வரும் ஜூன் 28ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

சிவராம் படுகொலை வழக்கின் சந்தேக நபரான பீற்றர் எனப்படும் ஆறுமுகம் சிறிஸ்கந்தராஜாவின் கோரிக்கைக்கு அமைய சிங்கள நீதிபதி முன்னிலையில் வழக்கினை விசாரிப்பதற்கு கொழும்பு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர் புளொட் ஆயுதக் குழு உறுப்பினர் என்றும் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூத்த தமிழ் ஊடகவியலாளரும் தமிழ்நெற் இணையத்தின் முந்நாள் ஆசிரியருமான தராகி என்று அறியப்பட்ட தர்மரட்ணம் சிவராம் 2005ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் நாள் கடத்தி செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

கடத்தப்பட்ட அடுத்த நாள் நாடாளுமன்றத்திற்கு அருகாமையில் உயர்பாதுகாப்பு வலய பகுதியில் அவரது உடலம் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பின் முதற் தடவையாக சிவராம் வழக்கு விசாரணைக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ச-5)

# துப்பாக்கி வெடித்ததில் இளைஞன் படுகாயம்

(உடுப்பிட்டி)

இராணுவச் சிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இளைஞன் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 11.40 மணியளவில் தொண்டைமானாறு சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் சந்நிதியைச் சேர்ந்த அரியரட்ணம் அருள்ராஜ் (வயது 18) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த அவர், ஊறணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

துப்பாக்கி வெடித்ததில் இளைஞனின் தோள்மூட்டில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3.52)

# திறப்பு விழா

(கிளிநொச்சி)

திருநகர் வீதியில் அமைந்துள்ள கிளிநகர் கிராம அபிவிருத்தி சங்கமும், கிராமசேவையாளர் பிரிவு அலுவலகமும் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி. பீற்றர் இராசநாயகம் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கிளி.மாவட்ட 571 ஆவது படையணியின் கொமாண்டர் கேணல் நந்த ஹத்துருசிங்க, கிளிநொச்சிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். ஜே.ஐ. திசநாயக்க ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ-2)

# சிறிதரன் எம்.பி. மீது தாக்குதல் நவ சம சமாஜக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மீதான தாக்குதலை நவ சம சமாஜக் கட்சி கண்டித்துள்ளது.

மேற்படி சம்பவத்திற்கு அரசே பொறுப்புக் கூறவேண்டும் எனவும் அக் கட்சி கோரியுள்ளது.

மேற்படி நாடாளுமன்ற உறுப்பினரின் போக்குவரத்து தொடர்பான தகவல்களைத் தெரிந்து வைத்துக்கொண்டே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அக் கட்சி கூறியுள்ளது. இது தொடர்பாக அக் கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

தற்போது தமிழ் மக்கள் மீது புரியப்படும் வன்முறைகள் தொடர்பான சர்ச்சைகள் நீடித்துக்கொண்டிருக்கும் இவ் வேளையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் பரிபூரண விசாரணைகளை நடத்தி உண்மையான குற்றவாளியை நீதியின் முன் நிறுத்தவேண்டும் என நவ சம சமாஜக் கட்சி கேட்டுக் கொள்கிறது என்றுள்ளது. (எ)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



துன்ப காலங்களில் தாம் என்றும் மூடிக் கிடக்கிற அஞ்ஞானத்தின் கதவுகள் திறந்து கொள்ள ஞான ஒளிக் கற்றைகள் நம்முள் பாய்வது போல் நமக்குத் தோன்றுகிறது. கோழைத் தனத்தை விடப் பெரியதொரு பாவம் வேறெதுவுமில்லை. கோழைகள் என்றுமே காப்பாற்றப்படமாட்டார்கள். இது நிச்சயம்!

என்னால் எந்தக் குறைபாட்டையும் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் கோழைத் தனத்தை மட்டும் தாங்க முடியாது. ஒருவர் ஓர் அடி அடித்தால் இரண்டு மடங்கு கோபித்து பத்து அடிகள் திருப்பித் தரவேண்டும். இதுதான் ஆண்மை.

கோழை இரங்கத்தக்கவன். நீங்கள் இறப்பதை, இறந்து படுகின்ற போதும் தீரமுடன் போராடி விட்டு இறந்து படுவதையே நான் பார்க்க ஆசைப்படுகிறேன். ஒரு போர் வீரனைப் போல கட்டளைகளுக்குப் பணிந்து உயிர் விடுவதே சிறந்தது. நிர்வாண நிலைக்குச் செல்லுங்கள். அதை அடைவீர்களாக! கோழைத் தனத்தால் அன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 105 ஆவது

# வடக்கின் பெரும் போர்

# நாளை கோலாகல ஆரம்பம்

ஆர்.யூ.பாலமுருகன்

வடக்கின் பெரும் போர் (**Battle of the North**) என வர்ணிக்கப்பட்டும் யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 105ஆவது இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டி நாளை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

நாளைக் காலை 8.30 மணிக்கு கோலாகல ஆரம்ப விழாவுடன் ஆரம்பமாகும் இப்போட்டி மூன்று நாட்கள் கொண்ட இன்னிங்ஸ் ஆட்டமாக நடைபெறும்.

இப்பெரும் கிரிக்கெட் போருக்கு யாழ். மத்திய கல்லூரி அணிக்கு ஞானசீலன் ஜெரிக்துஷனும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு ஆனந்தகுமார் விதுஷனும் தலைமை தாங்குகின்றனர்.

இரு அணிகளுக்கும் இடையிலான 'வடக்கின் பெரும் போர்' 1904 ஆம் ஆண்டு, இலங்கையிலேயே இரண்டாவதாகவும் யாழ்ப்பாணத்தில் முதலாவதாகவும் ஆரம்பிக்கப்பட்ட கிரிக்கெட் போட்டி என்பதுடன் 107வருட பழைமையானதும் பிரபல்யம் பெற்றதுமாகும்.

இப்பெரும் போர் நாட்டில் நிலவிய யுத்த சூழல் காரணமாக சில ஆண்டுகள் போட்டி நடைபெறாத நிலையில் நாளை ஆரம்பமாகும் போட்டி 105ஆவது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வடக்கின் கல்லூரிக்களுக்கிடையில் நடைபெறும் கிரிக்கெட் இன்னிங்ஸ் போட்டிகளில் மூன்று நாட்களைக் கொண்ட ஒரே ஒரு போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மத்திய கல்லூரிதான் யாழ். மாவட்டத்தில் பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டியை முதன் முதலில் ஆரம்பித்தது.

பின்னர் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியுடன் இணைந்து இவ்விரு கல்லூரிகளின் நட்புறவுப் பாலமாக வடக்கின் பெரும் போர் கிரிக்கெட் போட்டியை 105ஆவது முறையாக கல்லூரி சமூகத்தினர் ஒற்றுமையுடன் நடாத்தி வருகின்றனர்.

இப் போட்டியை சிறப்புற நடத்துவதற்கு நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வந்து பழைய மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்குவது வழமையான ஒரு நிகழ்வாகும்.

இறுதியாக நடைபெற்ற நான்கு வடக்கின் பெரும் போர் (2007, 2008, 2009, 2010) கிரிக்கெட் போட்டிகளிலும் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இவ் வருடம் நடைபெற்ற யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டிகளில் இரு அணிகளும் வெற்றிகள் பல குவித்துள்ளன.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணி இம்முறை மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி ஆகிய அணிகளை இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வெற்றிகொண்டது.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கு எதிராக முதல் இன்னிங்ஸில் 418 ஓட்டங்களை யாழ். மத்திய கல்லூரி குவித்தது.

அத்துடன் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி கண்டது. மேலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி , யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டியை யாழ். மத்திய கல்லூரி அணி சமநிலையாக்கியது.

அதேபோன்று யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணிகளை இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வெற்றி கண்டதுடன் அநுராதபுர மத்திய கல்லூரி அணியை 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

அத்துடன் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, யாழ் . இந்துக்கல்லூரி அணிகளுடான போட்டியை யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி சமநிலையாக்கியது.

யாழ். மத்திய கல்லூரி அணியில் அனுபவம் வாய்ந்த எட்வெட் எடின், அணித்தலைவர் ஜெரிக்தூஷன் டார்வின் என முன்னணித் துடுப்பாட்ட நட்சத்திரங்களுடனும் வதுஷனன், ஹரிஸ், தர்ஷன், கோகுலன் என துல்லியமான பந்து வீச்சாளர்களுடனும் சகல துறையில் ஜொலிக்க காத்திருக்கிறது.

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, ஹரிவதனன், சஞ்ஜீவன், விதுஷன், டக்ஷ்ஸன், அலக்ஸ்டயான், அற்ரியன் என சகல துறையிலும் பிரகாசிக்கும் படையுடன் களமிறங்குகிறது.

இரு அணிகளும் சம பலத்துடன் களமிறங்குவதால் இம்முறை வடக்கின் பெரும் போர் விறுவிறுப்பாக அமையுமென்பது யாழ். கிரிக்கெட் விமர்சகர்களின் கருத்து.

## ஆட்ட நேரம் ஆரம்பம்

- காலை 9.00 மணி-நண்பகல் 12.00 மணி
- மதிய போசனம் நண்பகல் 12.00 மணி-பிற்பகல் 12.40 மணி
- ஆட்டம் பிற்பகல் 12.40 மணி - பிற்பகல் 2.40
- தேநீர் பிற்பகல் 2.40 மணி- பிற்பகல் 3.00 மணி
- ஆட்டம் பிற்பகல் 3.00 மணி- மாலை 4.00 மணி




**'மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்'**

*அமர்ந்திருப்பவர்கள் (இ-வ)*
எஸ். வேதநாயகம் (விளையாட்டுத்துறைத் தலைவர்), ஜி. ஜெரிக்துஷன் (இணை அணித்தலைவர்), எல். ஓங்காரமூர்த்தி (அதிபர்), ஆர்.எட்வேட் எடின் (இணை அணித்தலைவர்), எஸ். சுரேஸ்மோகன் (பயிற்றுவிப்பாளர்), இ. பிரபாகரன் (பொறுப்பாசிரியர்)
*நிற்பவர்கள் (முதல் வரிசை), (இ-வ)*
ரி. தர்ஷன், எம். ஹரிஷ், எஸ். நிஷாந்தரூபன், ஆர். வதூஷனன், எஸ். ஜதிர்ஷன், எம். கிஷாந்தன், ரி. கோகுலன், வி. பில்சன், பி. டார்பின்
*நிற்பவர்கள் (இரண்டாவது வரிசை), (இ-வ)*
எஸ். சுலக்ஷ்ஸன், கே. ஜினைஸ்கனிஸ்ரன், பி. நிமல்ராஜ், பி. நிரோஜ், பி. டார்வின், எம். தர்ஷன்

## 104 போட்டிகளின் முடிபுகள் ஒரே பார்வையில்

| | |
|---|---|
| யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி | 33 |
| யாழ். மத்திய கல்லூரி வெற்றி | 26 |
| சமநிலை | 37 |
| முடிபுகள் கிடைக்கப்பெறாதவை | 07 |
| கைவிடப்பட்டது | 01 |




**'இருளில் ஒளி பிரகாசிக்கட்டும்'**

*அமர்ந்திருப்பவர்கள் (இ-வ)*
பி. லவேந்திரா (பயிற்றுவிப்பாளர்), எஸ். டக்ஷ்ஸன், ஏ. விதுஷன் (அணித்தலைவர்), வண. என். ஜே. ஞானப்பொன்ராஜா (அதிபர்), வி. ஹரிவதனன் (துணை அணித்தலைவர்), எஸ். சஞ்ஜீவன், வி. குமணன் (விளையாட்டுத்துறைத் தலைவர்).
*நிற்பவர்கள் (முதல் வரிசை), (இ-வ)*
எம். மதுஷன், எஸ். அலக்ஸ்டியோன், எஸ். ரஜீந்தன், எஸ். பிரியதர்ஷன், ரி. விமல்ராஜ், எஸ். சத்தியேந்திரா, ஏ. நிஷாந்தன், ஜே. அமிர்தயான், பி. துவாரகசீலன், ஜே. அற்ரியன்.
*நிற்பவர்கள் (இரண்டாவது வரிசை), (இ-வ)*
ஜி. ஏப்ரகாம் அனோஜன், கே. ரி. கபிலன், ஏ. சஞ்சயன், எஸ். கபில்ராஜ், வி. ஹரிகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரை வார்த்தது பாகிஸ்தான்: நியூசிலாந்து அதிரடி வெற்றி

## ரெய்லர் சதமடித்து அசத்தல்

(கண்டி)

ரோஸ் ரெய்லர் சதமடித்துக் கைகொடுக்க, நியூசிலாந்து அணி 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் தொடரில் பாகிஸ்தான் அணியின் வெற்றிநடைக்கு தடைபோட்டது நியூசிலாந்து அணி.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் கண்டி பல்லேகல முரளிதரன் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற 24-வது லீக் போட்டியில் ஏ பிரிவைச் சேர்ந்த பாகிஸ்தான்- நியூசிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் சரிவு கண்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பிரன்டன் மக்குலம் 06 ஓட்டங்களுடன் அக்தர் வேகத்தில் வெளியேறினார்.

அடுத்துவந்த ஹவ் நிதானமாக ஆட மறுமுனையில் குப்தில் சிறப்பான ஆட்டத்தை வழங்கினார்.

இதில் ஹவ் 29 பந்துகளை எதிர் கொண்டு 04 ஓட்டங்களை எடுத்து உமர்குல்லின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து குப்திலுடன் இணைந்த ரெய்லர், ஓட்டம் எதுவும் எடுக்காத நிலையில் கொடுத்த பிடி வாய்ப்பையும் அதன்பின் 08 ஓட்டங்களுடன் கொடுத்த பிடியெடுப்பு வாய்ப்பையும் தவறவிட்டார் விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மல். கண்டம் தாண்டிய ரெய்லர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி நியூசிலாந்து அணிக்கு நம்பிக்கையளித்தார்.

இதில் குப்தில் 71 பந்துகளில் அரைச்சதம் பெற நியூசிலாந்து அணி 25.2 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

எனினும் குப்தில் 86 பந்துகளில் (06 பவுண்டரிகள் உட்பட) 57 ஓட்டங்களை எடுத்து சகிட் அப்ரிடியின் சுழலில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய பிராங்லின் ஒரு ஓட்டத்துடன் வந்த வேகத்திலேயே அரங்கு திரும்பினார்.

தொடர்ந்து வந்த ஸ்ரைரிஸ் பொறுப்பான ஆட்டத்தை வழங்கினார்.

மறுமுனையில் ரோஸ் ரெய்லர் 78 பந்துகளில் அரைச்சதம் பெற நியூசிலாந்து அணி 36.3 ஓவர்களில் 150 ஓட்டங்களை அடைந்தது.

இதில் ஸ்கோட் ஸ்ரைரிஸ் 37 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 28 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்து அதிரடி காட்டிய நதன் மக்குலம் 10 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 02 சிக்ஸர்கள் அடங்கலாக) 19 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 45.5 ஓவர்களில் 210 ஓட்டங்களை எடுத்து 06-வது விக்கெட்டையிழந்தது.

### ரன் மழை

இந்நிலையில் 07-வது விக்கெட்டுக்காக ரெய்லருடன் கூட்டணிசேர்ந்த ஓரம் அதிரடி காட்ட நியூசிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

இதில் ரோஸ் ரெய்லர் 117 பந்துகளில் சதத்தைப் பூர்த்திசெய்ய நியூசிலாந்து அணி 48 ஓவர்களில் 250 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடி அக்தர், ரஷாக்கின் பந்துகளை அடித்து நொருக்க நியூசிலாந்து அணி வலுவான ஓட்ட எண்ணிக்கையை அடைந்தது.

இந்த ஜோடி 07-வது விக்கெட்டுக்காக 32 பந்துகளில் 85 ஓட்டங்களைப்பகிர்ந்தபோது ஜேக்கப் ஓரம் 09 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 03 சிக்ஸர்கள் அடங்கலாக) 25 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 07 விக்கெட்டுக்களையிழந்து 302 ஓட்டங்களை குவித்தது.


இறுதி 04 ஓவர்களில் 90 ஓட்டங்களைக் குவித்து நியூசிலாந்து அணி பலம் பெற்றது.

இதில் ரோஸ் ரெய்லர் 124 பந்துகளில் (08 பவுண்டரிகள், 07 சிக்ஸர்கள் அடங்கலாக) 131 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் உமர் குல் 03 விக்கெட்டுக்களையும் அக்தர், றீமான், அப்ரிடி, ஹபீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 303 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பம் முதலே சௌத்தி- மில்ஸ் பந்துவீச்சுக் கூட்டணி மிரட்டியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹபீஸ் 05, சௌத்தியின் பந்துவீச்சிலும் ஷேசாட் 10 ஓட்டங்களுடனும், யூனிஸ் கான் பூச்சியத்துடனும் மில்ஸின் வேகத்திலும் வெளியேறினர்.




கைகொடுப்பார் என எதிர்பார்த்த கம்ரான் அக்மலும் 08 ஓட்டங்களுடன் சௌத்தியின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 7.1 ஓவர்களில் 23 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 04 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

அடுத்து இணைந்த மிஸ்பா- உமர் அக்மல் ஜோடி நிதானமாக ஆடியது.

எனினும் மிஸ்பா உல்ஹக் 07 ஓட்டங்களுடன் சௌத்தியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த அப்ரிடி (02 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 09 பந்துகளில் 17 ஓட்டங்களை எடுத்து ஓரத்தின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 17.1 ஓவர்களில் 66 ஓட்டங்களை எடுத்து 06 விக்கெட்டுக்களையிழந்து தத்தளித்தது.

அடுத்துவந்த அப்துல் ரஷாக், உமர் அக்மலுடன் இணைந்து நிதானமாக ஆடி விக்கெட் சரிவை கட்டுப்படுத்தினார்.

இதில் உமர் அக்மல் 58 பந்துகளில் (03 பவுண்டரிகள் உட்பட) 38 ஓட்டங்களை எடுத்து நதன் மக்குலத்தின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணியின் துடுப்பாட்ட வரிசை சரிந்தது.

தொடர்ந்து வந்த றீமான் ஒரு ஓட்டத்துடன் நடையக் கட்ட பாகிஸ்தான் அணி 32.4 ஓவர்களில் 125 ஓட்டங்களை எடுத்து 08 விக்கெட்டுக்களை இழந்தது.

அடுத்துவந்த உமர் குல் அதிரடி காட்டி மகிழ்ந்தார். மறுமுனையில் அப்துல் ரஷாக் 62 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இதில் அப்துல் ரஷாக் 74 பந்துகளில் (09 பவுண்டரிகள் உட்பட) 62 ஓட்டங்களை எடுத்து ஸ்ரைரிஸின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய அக்தர் பூச்சியத்துடன் வந்த வேகத்தில் அரங்கு திரும்ப பாகிஸ்தான் அணி 41.4 ஓவர்களில் 192 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் இப் போட்டியில் 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி தொடரில் 06 புள்ளிகளைப் பதிவுசெய்தது.

துடுப்பாட்டத்தில் உமர் குல் ஆட்டமிழக்காமல் 09 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 03 சிக்ஸர்கள் உட்பட) 25 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் சௌத்தி 03 விக்கெட்டுக்களையும், மில்ஸ், மக்குலம், ஸ்ரைரிஸ் ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும் ஓரம் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் நியூசிலாந்து அணியின் வெற்றி நாயகன் ரெய்லர் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## புள்ளிப் பட்டியல்

ICC Cricket World Cup 2011

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| நியூசிலாந்து | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +1.848 |
| பாகிஸ்தான் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +0.760 |
| இலங்கை | 4 | 2 | 1 | 0 | 1 | 5 | +2.663 |
| அவுஸ்திரேலியா | 3 | 2 | 0 | 0 | 1 | 5 | +1.813 |
| சிம்பாவே | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | +0.079 |
| கனடா | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -2.083 |
| கென்யா | 4 | 0 | 4 | 0 | 0 | 0 | -3.403 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 3 | 2 | 0 | 1 | 0 | 5 | +0.768 |
| இங்கிலாந்து | 4 | 2 | 1 | 1 | 0 | 5 | +0.054 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +2.667 |
| தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +1.754 |
| அயர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.296 |
| பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -1.764 |
| நெதர்லாந்து | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -3.058 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்தகட்ட...

சந்திரன் குறிப்பிட்டார்.

மேலும் அரசு இவ்வாறு இழுத்தடிப்பதற்கு மூன்றாம் கட்டப்பேச்சில் அதிகாரப்பரவலாக்கம் குறித்து பேச்சு நடத்துவது என கடந்த பேச்சில் இணக்கம் காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மூன்றாம் கட்டப்பேச்சு இடம் பெற்று அதிகாரப் பரவலாக்கல் குறித்து பேசி அவ்விடயம் வெளியில் கசிந்தால், தேர்தலில் தமக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சமே அரசு இவ்வாறு பேச்சை பிற்போட்டு இழுத்தடிப்புக்களை தொடருவதற்கான காரணமாக இருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச–5)

## நாட்டை விட...

ஒப்புதல் அளிக்கப்படும் என்ற கோரிக்கைகளை அவர் வைத்துள்ளார்.

ஆனால் கடாபியின் கோரிக்கையை ஏற்க எதிர்ப்பாளர்கள் மறுத்துவிட்டனர். அவர் அவ்வாறு எளிதாக லிபியாவைவிட்டு வெளியேறினால் அது இதுவரை பலியானோர் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு இழைக்கப்பட்ட அவமானம் என்று கூறியுள்ளனர். இடைக்கால அரசின் ஊடக செய்திச் தொடர்பாளர் முஸ்தபா ஹெறானி கூறுகையில்,

கடாபியிடம் இருந்து அதுபோன்ற கோரிக்கை வந்தது உண்மைதான். ஆனால் இன்றைக்கு லிபியா ரத்தம் சிந்தக் காரணமான அந்த ஆளை நாங்கள் எதற்காக நம்பவேண்டும்? என்று கேள்வி எழுப்பினார். கடாபி தப்பிச் செல்வது குறித்த இத் தகவலை லிபிய அரசு மறுத்துள்ளது. (ச–5)

## தாக்குதல் நடத்தியோரை...

வந்து தாக்குதல் நடத்திய சந்தேகநபர்கள் பற்றி பெறுமதியான தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பவ இடத்திலிருந்து கைக் குண்டுகளை நாம் மீட்டுள்ளோம். மோட்டார் சைக்கிளில் வந்து தாக்குதல் நடத்திய சந்தேக நபர்கள் பற்றி பெறுமதியான தகவலை சேகரித்துள்ளோம் என ஜயந்த கமகே கூறினார்.

அத்துடன் இந்த சம்பவம் தொடர்பில் அரசாங்க பகுப்பாய்வாளர் விசாரணைகளை நடத்தி வருகின்றார். நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்தபோதே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனுக்கோ அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கோ காயம் எதுவும் ஏற்படவில்லை எனவும் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச–5)

## 63 தொகுதி...

பிறகு 63 தொகுதிகள் கேட்பது நியாயமில்லை என்று கூறிய திமுக, கூட்டணியில் நீடிக்க காங்கிரஸ் விரும்பவில்லை என்பதையே இந்த நடவடிக்கை காட்டுகிறது என்று கூறி, மத்திய அமைச்சரவையிலிருந்து வெளியேறுவதாக தீர்மானம் நிறைவேற்றியது.

அதைத் தொடர்ந்து இரு கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்ட பேச்சுவார்த்தையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை உடன்பாடு ஏற்பட்டது. (ச–5)

## இலங்கையில் மோசமாகும்...

மனித உரிமைகள் பேரவையின் 16ஆவது கூட்டத்தொடர் மார்ச் 25ஆம் திகதி வரை ஜெனிவாவில் இடம்பெறுகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னைய கூட்டத்தொடரில் வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை நிறைவேற்றத் தவறியுள்ளதென இனத்துவேசத்திற்கு எதிரான அனைத்துலக அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

சட்டப் பாதுகாப்பின்மை, திட்டமிட்ட உரிமை மீறல்கள் மற்றும் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்புதல் போன்ற மோசமான கலாசாரம் அதிகரித்துள்ளமை போன்றவற்றை, நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் வடக்கு கிழக்கில் சாட்சியளித்தவர்களின் வாக்குமூலங்களிலிருந்து அறிய முடிகின்றது.

அத்துடன் 18ஆவது திருத்தச்சட்ட அமுலாக்கமானது இலங்கை மனித உரிமை ஆணையகத்தின் சுயாதீனத் தன்மை தொடர்பான எதிர்பார்ப்புகளை இல்லாமல் செய்துள்ளது எனவும், இனத்துவேசத்திற்கு எதிரான அனைத்துலக அமைப்பு மேலும் விசனம் தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கில் இராணுவமயப்படுத்தல் அதிகரிப்பு, சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் தொடர்கின்றமை, சட்ட நடவடிக்கையின்றி கைதிகள் தடுத்து வைப்பு மற்றும் காணாமல்போதல் என்பன பாரதூரமான மீறல்கள் என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நிலவுகின்ற மனித உரிமை மற்றும் போருடன் தொடர்புபட்ட பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பான பரிந்துரைகளை நல்லிணக்க ஆணைக்குழு முன்வைக்குமென அரசாங்கம் கூறுகின்றது.

வடக்கு கிழக்கில் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்குமாறும் அனைத்துலக கிறிஸ்தவ அமைப்பான பக்ஸ் றோமான, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு கையளித்துள்ள தனது அறிக்கையில் கோரியுள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட்ட போரினால் முன்னர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் ஒன்றுகூடும் உரிமை மற்றும் அமைப்பு ரீதியான ஒருங்கிணைவுகளுக்கு எதிரான அடக்குமுறையை இலங்கை அரசாங்கம் தொடர்வதாகவும் அவ் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

மனித உரிமை பாதுகாவலர்களுக்கெதிரான கொலைகள் மற்றும் அச்சுறுத்தல் தொடர்கின்ற அதேவேளை மக்களுக்குச் சேவையாற்றும் அரசசார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதித்துள்ளது என்கிறது அனைத்துலக கிறிஸ்தவ அமைப்பு.

போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பான ஆதாரங்கள் வெளிவந்துள்ள போதும் அவற்றை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் மறுத்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச சட்ட மீறல் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா. தலைமையிலான சுயாதீனமான விசாரணையே பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்குமான நீதியை வழங்குவதற்கான முதற்படியாக அமையும் என மன்னிப்பு சபை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்களால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் எனவும் மன்னிப்பு சபை கோரியுள்ளது.

ஐ.நா. தலைமையில் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அமெரிக்க செனற் அவை அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

இத் தீர்மானத்திற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சகம், அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ஆணைக்குழு தேசிய நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கான பலம் வாய்ந்த தேசியப் பொறிமுறை என்பதை இத்தீர்மானத்தை வரைந்தவர்கள் கருத்திலெடுக்கவில்லை என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ச–5)

## நல்லிணா...

தாக அவர் கூறினார்.

நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்கும் நேரில் சென்று பொதுமக்களின் சாட்சியங்களை பதிவுசெய்த நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியாகும் முன் குறித்த ஆணைக்குழு சுயாதீனமற்றது என எவராலும் விமர்சிக்க முடியாது.

கடந்தவாரம் தான் ஜெனீவாவில் இடம் பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட போது நல்லிணக்க ஆணைக்குழு குறித்து 50க்கும் மேற்பட்ட நாடுகளின் தூதுவர்கள் மற்றும் வதிவிட பிரதிநிதிகளை சந்தித்து விளக்கியதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார். (ச–5)


AUTO CAR HIRE

வெள்ளை நிறமுடைய திருமண வைபவங்களிற்கு ஏற்ற கார் நாள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.


தொடர்புகளுக்கு: 0215673555 /666

(3979)


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (அலையரசு)

### (தலைவர், அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், அனலைதீவை வதிவிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் இல 11, வெங்கடேசன் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்கள் (06.03.2011) ஞாயிற்றுக்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பத்தினிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிறிமாறன் மற்றும் ஜெயசங்கர் (பிரான்ஸ்), மோகனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சங்கீதா, துசீந்தன் ஆகியோரின் மாமனாரும் சுஹாசினி, கலாஜினி, கௌசிகா ஆகியோரின் பேரனும் நவரத்தினம், துரைசாமி, காலஞ்சென்றவர்களான சௌந்தரம், தையலம்மை, சிவகாமி மற்றும் சடேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சின்னப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, சண்முகம், குமாரசாமி, செல்வரத்தினம் மற்றும் தங்கம்மா, இரத்தினம், இராசையா, சிவசாமி, யோகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.03.2011) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 11, வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 1086

தகவல் :-
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(C-2659)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட செயலக நிதிக்கிளையில் கடமையாற்றும் செல்வி இ.ஜானகி அவர்களின் தாயார்

## இராசநாயகம் தையல்நாயகி

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினர்க்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதம கணக்காளர், கணக்காளர், உத்தியோகத்தர்கள்.
மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்.

(3989)


ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

Spoken English பயிற்சிமையம்.

An ISO 9001:2000 Certified Company

veta

Experts in English Training




அரச, தனியார் துறை உத்தியோகத்தர்களுக்கான விசேட மாலை நேர வகுப்புக்களும்

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | | சாவகச்சேரி | | நெல்லியடி | |
|---|---|---|---|---|---|
| Mon, Wed, fri | 9.00 a.m. | Sat, Sun | 3.30 p.m. | Sat, Sun | 2.30 p.m. |
| Tue, Thu | 5.00 p.m. | Mon, Wed | 9.30 a.m. | Tue, Thu | 3.30 p.m. |
| Sat, Sun | 3.00 p.m. | | | Tue, Thu | 5.00 p.m. |

இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலுங்கள்.

DMI COMPUTER EDUCATION

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403

M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470

No.174, கண்டி வீதி. HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243


யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி

வைத்தியகலாநிதி சி.யமுனானந்தா எழுதும்

**காச நோய் சமூக அணுகுமுறை**

உங்கள் வலம்புரியில் நாளைமுதல் தொடர்ந்து வெளிவரும்.

காசநோயை அறிந்து அதனைக் கட்டுப்படுத்த தவறாது வாசியுங்கள்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org